janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 ஜனவரி 30 - பிப்ரவரி 05 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 43




**இந்தியக் குடியரசின் அடித்தளங்கள் தகர்க்கப்படுகின்றன**

நமது இந்தியத் திருநாட்டை இறையாண்மைமிகு ஜனநாயக குடியரசாக பிரகடனப்படுத்தும்>>>

ப 08



**மதசார்பற்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க...**

அளவில் பெரிய உபி, அளவில் சிறிய கோவா உட்பட ஐந்து மாநிலங்களின் எதிர்வரும் >>>

ப 06




**வீரவணக்கம்**

**கம்யூனிஸ்ட் என்பது என் அடையாளம்**

மரணத்தை, இவ்வாறு எதிர் கொண்டவர்கள் ஒரு சிலரே! தனது மரணம் எப்பொழுது நிகழப் போகிறது என்பதை மிக நன்றாகவே >>>

ப 15



## ஒன்றிய பாஜக ஆட்சியின் குடியரசு தின அணிவகுப்பில் விடுதலை போராட்ட வீரர்களின் தமிழக ஊர்திகள் புறக்கணிப்பு!

# தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்




**சங்கராச்சாரியை வைக்க வேண்டுமா?** | **மதச்சார்பில் பா.ஜ.க. ஆட்சி செய்கிறதா?** | **நாட்டைப் பாதுகாக்க ஒன்றுபடுங்கள்!**

## விடுதலைப் போராட்ட வீரர், மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு கண்டன முழக்கம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான இரா. நல்லகண்ணு தேசியக் கொடியேற்றினார். நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநி லச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற் குழு உறுப்பினர்கள் டி.எம்.மூர்த்தி, நா.பெரியசாமி, மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ். ஏழுமலை, வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, மாநிலக்குழு உறுப்பினர் ஏ.ஆர்.சாந்தி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

பின்னர், குடியரசு தின அணிவகுப்பில் விடுதலைப் போராட்ட வீரர்களின் தமிழக ஊர்தியை அனுமதிக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இரா. நல்லகண்ணு பேசியதாவது:

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில் நம்முடைய நாட்டுகென்று அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. அந்த அரசியல் நிர்ணயசபை உருவாக்கப்பட்ட பிறகு இந்த நாட்டுக்கான தனி அரசியலமைப்பு சட்டம் கொண்டுவர வேண்டும், அந்தச் சட்டம் எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கும், சட்டத்தை வடிவமைப்பதற்கு யார், யாரை போடலாம் என்று ஆலோசித்தபோது, அம்பேத்கர் அவர்களை சட்ட வரைவுக்குழுவிற்கு தலைவராகப் போடலாம் என்று முடிவு வந்தது.

ஏனென்றால் சட்டத்தைப் பற்றி தெரிந்தவர், சிறந்த அறிஞர் ஆவார். பல பேர் அறிஞர்களாக இருக்கிறார்கள், இருந்தாலும் அவர் தான் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு காரணம், ஏழை, எளிய மக்களைப் பற்றியும், அவர்களது நிலையைப் பற்றி நன்கு அறிந்தவர். மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்ற கருத்து அவருக்கு இருந்தது. அதற்காக அந்த சட்ட வரைவுக்குழுவின் தலைவராக அம்பேத்கர் இருக்கலாம் என்று அவர் கொண்டு வரப்பட்டார்.

அதேபோல் அனைத்து பெரிய சட்ட நிபுணர்களையும் சேர்த்து அந்த குழு போடப்பட்டது.

1947 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கிய அரசியல் அமைப்பு சட்ட உருவாக்கப்பணி 1949 நவம்பர் மாதத்தில் நிறைவு பெற்றது. அரசியமைப்பு சட்டம் 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது.

அரசியல் நிர்ணய சபையில் டாக்டர் அம்பேத்கர் பேசும்போது, நமது இந்தியாவில் ஜாதிகள் உள்ளது, மதங்கள் உள்ளது. ஆனால் இந்தச் சட்டம் இந்த மதங்களுக்கு அப்பாற்பட்டு, ஜாதிகளுக்கு அப்பாற்பட்டு மக்களை ஒன்றுதிரட்ட வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

ஆகவே ஒரு சட்டம் வரும்போது அடிப்படை குறிக்கோள், நம்முடைய சட்டம் எல்லோரும் சுதந்திரமாக இருக்க வேண்டும், அந்த சுதந்திரம் அடிப்படையாக இருக்க வேண்டுமானால், சமத்துவம், சகோதரத்துவம் இருக்க வேண்டும். சமத்துவமும், சகோதரத்துவமும் இருந்தால்தான் சுதந்திரம் வலுப்பெறும். அத்தகைய சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.


அதற்காகத்தான் இந்தநாடு ஒரு சமத்துவ நாடாக, சகோதரத்துவ நாடாக, ஒரு சுதந்திர நாடாக இருக்க வேண்டும். நாம் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். மதம் அவரவர்கள் சம்மந்தப்பட்டது, ஆனால் சட்டம் மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்தச் சட்டம்தான் இன்றைக்கு இருக்கிறது.

சட்டத்தைப் பாதுகாப்பது நமது கடமை, அவற்றைதான் ஒன்றிய அரசு, மாநில அரசுகள் பின்பற்றி வந்திருக்கிறது. ஐக்கிய முன்னணி அரசுகள் வந்திருக்கிறது, கம்யூனிஸ்ட்கள் மாநிலங்களில் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள்.

ஆனால் இப்போது பா.ஜ.க.

தொடர்ச்சி 5ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்




5 மாநில சட்டமன்ற தேர்தலில் ஒட்டுக்கு விருதா?! – பொதுமக்கள்

## மாநிலங்களைச் சீர்குலைக்கும் வஞ்சகச் செயல்!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

மாநிலங்களில் பணியாற்றி வரும் ஐஏஎஸ் (இந்திய ஆட்சிப் பணி) ஐபிஎஸ் (இந்தியக் காவல் பணி) அதிகாரிகளை மாநில அரசின் ஒப்புதல் பெறாமல் பணியிட மாற்றம் செய்யும் வகையில் ஒன்றிய அரசு விதிகளை திருத்துவதில் தீவிரம் காட்டி வருகிறது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை அப்பட்டமான அதிகார அத்துமீறலாகும். கூட்டாட்சி கோட்பாட்டை தகர்க்கும் செயலாகும்.

மாநில மக்களால் தேர்வு செய்யப்பட்டு அமைக்கப்படும் சட்டமன்றங்கள் மற்றும் அமைச்சரவைகளின் அதிகாரத்தையும் பறிக்கும் எதேச்சதிகார முறையாகும். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதிகார வர்க்கத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களை சீர்குலைக்கும் வஞ்சக எண்ணத்தோடு அணுகும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இது தொடர்பாக எதிர்கட்சி ஆளும் மாநிலங்கள் ஒன்றுபட்டு ஒன்றிய அரசுக்கு வலுவான நிர்பந்தம் தரும் நடவடிக்கைக்கு தமிழ்நாடு முதமைச்சர் முன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




# நிறைவேறி வரும் நீண்ட நெடுநாள் கனவு – 2

**பேரன்புமிக்க தோழர்களே!**

**சிவகங்கையில் நடைபெற்ற அமைப்பு நிலை மாநாட்டில் கோபிசெட்டிபாளையத்தில் நிரந்தர கட்சிக் கல்வி கட்டிடம் ஓராண்டு காலத்தில் கட்டி முடிப்பது என்று முடிவு செய்தோம்.**





கொடிய கொரோனா காரணமாக தாமதமானாலும் தோழர் சி.எஸ். நினைவு நாளான 18.9.2020 இல் தோழர் தா. பாண்டியன் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று பணிகள் தொடங்கியது.

ஏறத்தாழ ரூ.5 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்து, நிதி வசூலை மேற்கொள்ள மாவட்ட வாரியாக இலக்கு நிர்ணயம் செய்து நிதி வசூல் பணிகளையும் மேற்கொண்டோம்.

மாவட்ட அமைப்புகள் தாங்கள் ஏற்றுக் கொண்ட இலக்கை நிறைவேற்றி முடிக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டது பாராட்டுக்குரியது, இலக்கு முழுமையாக முடியவில்லை என்றாலும், இலக்கை நிறைவேற்றிட மீண்டும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டிடம் நான்கு தளங்களைக் கொண்டது.

ஒவ்வொரு தலமும் 4400 சதுர அடியில் கட்டப்பட்டு வருகின்றது. தற்போது இரண்டு தளங்கள் முடிந்துள்ளன. மேலும் மூன்றாவது, நான்காவது தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நான்கு தளங்களும் 17,600 சதுர அடியாகும். 50 அடி உயரம் கொண்டதாக அமையும். தரைத்தளம் உணவு கூட்டமாக இருக்கும். முதல் தளம் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்த பயன்படுத்தப்படும். இரண்டாம் தளம் வகுப்பறை, மாணவர்களுக்கான உணவுக்கூடம், நூல் நிலையம் ஆகியன அமைக்கப்படும். மூன்றாம் தளத்தில் பயிற்சி பெற வரும் தோழர்கள் தங்குவதற்கான அறைகள் கட்டப்படும். இவை முழுமையாக முடிவடைந்து திறப்பு விழா காண சில மாதங்களாகும்.

இப்பணிகளை பொறியாளர்கள் சேகர், சத்யபிரகாஷ் மற்றும் தோழர் உதயன் ஆகியோர் அன்றாடப் பணிகளை கவனித்து மிகச் செம்மையுறச் செய்து வருகின்றனர்.

மேலும் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் தோழர் டி.ஏ.மாதேஸ்வரன், மாநிலக் குழு உறுப்பினரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான தோழர் பி.எல்.சுந்தரம் மற்றும் தோழர்கள் உடனிருந்து கவனித்து வருகின்றனர்.



இரண்டாம் தளம் மேல்பகுதி காங்கிரீட் போடும் பணிகள் கடந்த 8.1.2022 ல் நடைபெற்றது.

கட்டிடக் குழு தோழர்கள் ந.பெரியசாமி (ஒருங்கிணைப்பாளர்), கே.சுப்பராயன் எம்.பி., எம்.ஆறுமுகம் முன்னாள் எம்எல்ஏ, க.சந்தானம், மாதேஸ்வரன், பி.எல்.சுந்தரம், ஈரோடு தெற்கு மாவட்ட பொருளாளர் பிரபாகரன் ஆகியோர் கட்டிடப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதுவரை ஒரு கோடியே இருபத்தி ஏழு லட்சம் செலவு செய்யப்பட்டுள்ள வரவு – செலவுகளையும் சரிபார்த்து மேற் கொள்ள வேண்டிய பணிகளுக்கு திட்டமிட்டுள்ளனர்.

தோழர்களே நமது கட்சியின் நீண்ட நெடுநாள் கனவு நிறைவேறி கொண்டுள்ளது. அவை முழுமை பெறவேண்டும். தடங்கல் இன்றி பணிகள் நிறைவடைந்திடவும், சில மாதங்களில் நிறைவுபெற்று திறப்புவிழா காணவும், அனைவருடைய ஒத்துழைப்பும் ஒருசேரத்தேவை என்பதனை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

மாவட்டங்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட இலக்கை முழுமையாக பூர்த்தி செய்திட திட்டமிட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும்.

வேண்டுகோள்:

நமது கட்சி உறுப்பினர்கள், அனுதாபிகள், ஆதரவா ளர்கள், வர்க்க, வெகுஜன அமைப்புகளில் பணியாற்றி வரும் மாத ஊதியம் பெறுவோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர், தாங்களாக முன்வந்து தங்களால் இயன்ற நிதியை வழங்கிட முன்வர வேண்டுகிறோம்.

தாங்கள் பெற்றுவரும் ஒருமாத ஊதியத்தை அல்லது ஓய்வுகால ஊதியத்தை அல்லது அதற்கும் மேலாக வழங்கிட முன்வர வேண்டுகிறோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க, கால காலத்திற்கும் நிலைத்து நிற்கக் கூடிய நிரந்தர கட்சிக் கல்வி கட்டிடத்திற்கு தங்களின் பங்களிப்பை மனமுவந்து அளித்திட முன்வரவேண்டுமென வேண்டுகிறோம்.

நீங்கள் ஒவ்வொருவரும் வழங்கும், வழங்கிட உள்ள நிதி என்பது கோவில் உண்டியலில் கொட்டப்படும் நிதி அல்ல.

மாறாக சமூக மாற்றத்திற்கான மகத்தான போரில் பங்கு பெற்று வரும் தோழர்களை தத்துவார்த்த ரீதியாக, அரசியல் ரீதியாக, அமைப்புநிலை ரீதியாக வளர்த்தெடுக்க ஆகச்சிறந்த கொள்கை வீரனாக உருவாக்க பயன்படப் போகின்ற மகத்தான நிதி என்பதனை நன்கு அறிவீர்கள்.

‘சிறுதுளி பெரு வெள்ளமாய்’ பெருக்கெடுப்பது போன்று, நீங்கள் ஒவ்வொருவரும் உதவிட முன் வந்தால் அவை பெரும் நிதியாய் குவியம். அந்நிதியின் மூலம் நமது கட்டிடம் வானளாவ உயர்ந்து கம்பீரமாய் நிலைபெற்று நிற்கும்.

நமது வாழ்க்கையில் எத்தனையோ செலவுகளை செய்கின்றோம். அவைகள் பயன் அளித்ததா? அளிக்கவில்லையா என்பது நமக்குத் தெரியாது.

ஆனால், கோபிசெட்டிபாளையம் கட்டிடத்திற்கு நிதி அளித்தால், அதனுள் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் உங்களை நினைவுகூரும் அல்லவா?

உங்களின் பணம் மட்டுமல்ல, உங்களோடு பணியாற்றும் நண்பர்களிடத்திலும், நாம் நிதி கேட்கலாம், ஒவ்வொரு தோழரும் இத்தகைய முயற்சிகளை தங்களின் கடமை என்று மேற்கொண்டால் தாங்கள் ஒவ்வொருவரும் சில லட்சம் ரூபாய்களை வழங்க முடியும், வழங்க முன்வர வேண்டுகிறோம்.

தோழர்களே கேரள மாநிலத்தின் முதலமைச்சராக நமது மதிப்புமிக்க தலைவர் தோழர் பி.கே. வாசுதேவன் நாயர் இருந் தார் என்பதனை அறிவோம். அவர் முதலமைச்சராக இருந்த போது தான் இளைஞர்களுக்கு வேலை இல்லாக் கால நிவாரணம் என்கிற மகத்தான திட்டத்தை செயல்படுத்தினார். மிகக் கடுமையான நிதி நெருக்கடியில் உள்ள சூழலில், இத்திட்டம் எப்படி சாத்தியமாகும்? என பத்திரிகையாளர்கள் கேட்டபோது “மனம் இருந்தால் மார்க்கமுண்டு” என்று பதில் கூறினார்.

பாலன் இல்லம் கட்டப்பட்டபோது மாநில மைய அலுவலகத்திற்கு முதியவர் ஒருவர் வந்தார். கடுமையான வெயில், முகமெல்லாம் வேர்த்து வடிகின்றது, தனது துண்டால் முகத்தை துடைத்தவாறு தா.பா. இருக்கின்றாரா? எனக் கேட்டார். இல்லை, வெளியில் சென்று இருக்கின்றார், வருவார் என பதில் அளித்தபோது, தனது கையில் வைத்திருந்த மஞ்சள் பையில் இருந்து ரூபாய் நோட்டுகளை எடுத்து வைத்து, இதில் ரூபாய் இரண்டு லட்சம் உள்ளது, கட்டிட நிதிக்கு கொடுத்து விடுங்கள் என்று கூறினார்.

தனது வீட்டை விற்று, தனது மகள்களுக்கு உரிய பாகங்களை பிரித்துக் கொடுத்துவிட்டு தனது பங்கான இரண்டு லட்சத்தை கட்சிக்கு வழங்கினார் அவர்தான் அம்பத்தூர் முருகேசன்.

அண்மையில் மத்திய சென்னை மாவட்டத்தை சேர்ந்த தோழர் அத்திப்பட்டு விஜயகுமார், ஆண்டுதோறும் பொங்கல் விழாவின்போது, நலிந்த பிரிவினருக்கு குறிப்பாக பெண்களுக்கு சேலை வழங்கி வருகின்றார். இவ்வாண்டு 500 பெண்களுக்கு சேலை வழங்கினார். அத்துடன் கட்சி நிதியாக ரூபாய் ஐம்பது ஆயிரம் வழங்கினார். அவரது மகள் திருமணத்திலும் ரூபாய் ஐம்பது ஆயிரம் வழங்கினார். சேலை வழங்கும் திட்டத்தை கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றார். கொரோனா கடுமையாக இருந்த போது தினசரி 250 பேருக்கு ஒரு மாத காலம் உணவு வழங்கியுள்ளார். இவ்வாறு சேவை செய்யும் விஜயகுமார் பெரும் பணக்காரர் அல்ல, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்தான்.

பணம் முக்கியமல்ல, மனம் முக்கியம்.

தோழர் பி.கே.வி. குறிப்பிட்டதைப் போன்று ‘மனம் இருந்தால் மார்க்கமுண்டு’.

கனவு நிறைவேற உங்களின் உதவி – ஒத்துழைப்பு தேவை.

உதவி செய்ய முன்வருவதுடன் காலத்தில் செய்வது மிக முக்கியம் என்பதனை அறியாதவர்கள் அல்ல.

இன்றே, இப்போதே உங்களின் பங்களிப்பை அளித்திட முன்வாருங்கள். முன் வருவீர்கள் என்று நம்பிக்கையுடன்.

மீண்டும் சந்திப்போம் வணக்கம்.

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

# ஐ.ஏ.எஸ், பணிகளுக்கான புதிய விதிகள் திருத்தம்



த.லெனின்






# இந்தியக் கூட்டாட்சி முறையைத் தகர்த்தெறியும்

**சமீபத்தில் ஒன்றிய அரசு கொண்டுவர உள்ள அகில இந்திய பணிகளுக்கான விதிகள் திருத்தம் நமது நாட்டின் நிர்வாகத்துறையை நிர்மூலப்படுத்தும் அடிப்படைகளைக் கொண்டது.**

ஒன்றிய அரசு கொண்டுவர உள்ள விதிகள் திருத்தம் ஏற்கனவே உள்ள இந்திய ஆட்சிப் பணிக்கான விதிகள் 6(1) குறித்ததாகும். அதாவது 1954ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவ்விதியின்படி ஒரு மாநிலத்தில் இருந்து டெபுடேசன் மாற்றுப் பணிக்காக ஒன்றிய அரசுக்கோ அல்லது பொதுத் துறை நிறுவனங்களுக்கோ, மற்ற மாநிலங்களுக்கோ செல்ல வேண்டும் என்று சொன்னால் அந்த மாநிலத்தின் ஒப்புதலைப் பெற்றுதான் மாற்ற முடியும். இத்துடன் சம்மந்தப்பட்ட அதிகாரியின் விருப்பமும் அவசியம் என்பது மரபாக உள்ளது. இந்த விதியை மாற்றி மாநில அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்றாலும் ஒன்றிய அரசே இதில் தீர்மானிக்க முடியும் என்று ஜன.25, 2022க்குள் கொண்டு வரப்படவுள்ள இந்தச் சட்டத்திருத்தம் வழிவகை செய்கிறது.

கொண்டு வரப்படவுள்ள நான்கு சட்டத்திருத்தங்களில் இரண்டு சட்டத்திருத்தங்கள் ஏற்கனவே கட்டாயமாக்கப்பட்டிருக்கும் மாநில அரசின் ஒப்புதலைப் பெறாமலேயே ஒன்றிய அரசு செயல்பட வழிவகுக்கிறது. அத்துடன், மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை ஒன்றிய அரசுக்கு நிலையாக அனுப்பியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது.

இந்தச் சட்டத்திருத்தம் சம்மதப்பட்ட அலுவலரின் விருப்பத்தையும் மீறக்கூடியதாக உள்ளது. எனவே, இது நமது ஜனநாயகத்திற்கு பெரும் சீர்குலைவையே ஏற்படுத்தும்.

பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமனறத் தேர்தலில் முதன் முதலாக போட்டியிட்ட 2014ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கூட்டுறவு கூட்டாட்சி முறையைக் (**Cooperative Federalism**) கொண்டு வருவேன் என்று தொடர்ந்து பேசி வந்தார்.

ஆனால், இப்போது கிழக்கிந்திய கம்பெனி வைஸ்ராய்களைப் போல மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதும், அரசு நிர்வாகம் முழுவதையும் தன் ஒற்றை விரலுக்கு கட்டுப்பட்டதாக மாற்றுவதற்குமான முயற்சியில் இறங்கியுள்ளது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி காலத்தில்தான் இந்தியாவில் குடிமைப் பணி அதிகார முறை கொண்டு வரப்பட்டது. அதற்கு அவர்கள் இட்ட பெயர் – மாண்புமிகு கிழக்கிந்திய கம்பெனி சிவில் சர்வீஸ் (**HEICCS**) என்பதாகும். 1858க்குப் பிறகு இந்த சிவில் குடிமைப் பணியில் மாற்றம் கொண்டு வரப்பட்டு ஐ.சி.எஸ். என்று பெயர் மாற்றப்பட்டது. இதுவே 1947 வரை நடைமுறையிலும் இருந்தது.

1919 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட இந்திய அரசாங்க சட்டத்தின் மூலம் இந்திய சிவில் சர்வீஸ், இந்திய அரசு செயலரின் பொது மேற்பார்வையின் கீழ் அனைத்திந்திய சேவைகள் மற்றும் மத்திய சேவைகள் சட்டம் என இரு பிரிவாக பிரிக்கப்பட்டன.

1946ல் பிரிமியர் மாநாட்டில் இந்திய சிவில் சர்வீஸ் ஆட்சிப் பணிகள் நிர்வாகச் சேவையை உருவாக்க அன்றைய மத்திய அமைச்சரவை முடிவு செய்தது. இதன் அடிப்படையில் இம்பீரியல் காவல்துறை அமைப்பையும் இந்திய காவல் பணிக்காக அது உருவாக்கியது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது, கடந்தகால காலனி ஆதிக்க கொடூர நிகழ்வுகளுக்கு காரணமாக வெகுமக்களால் சொல்லப்பட்ட தண்டலாக்காரர்கள் அல்லது வரி வசூலிப்போர் என்று நடைமுறையில் அழைக்கப்பட்ட இந்த ஐ.சி.எஸ். பணியின் மீது பல சுதந்திரப் போராட்டத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் வெறுப்பு இருந்தது.

பண்டித ஜவஹர்லால் நேரு இந்த ஐ.சி.எஸ்.பணியே இருக்கக் கூடாது என்றும் அதனை உடனடியாக நீக்க வேண் டும் என்றும் அரசியல் நிர்ணய சபையில் பேசினார். அந்த அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் பல்வேறு பழக்க வழக்கங்கள் உள்ள ஒரு பன்மைத்துவ நாட்டிற்கு அகில இந்திய அளவிலான சேவை இல்லையென்றால் ஒன்றியம் இல்லாது போய்விடும், நாட்டை ஒருங்கிணைக்க முடியாது என்றார்.

அத்துடன் இந்தப் போக்கை நீங்கள் ஏற்கவில்லை என்றால் இதற்கு மாற்றாக வேறு ஒன்றும் இல்லை. இவர்கள்தான் கருவிகள். இவற்றை அகற்றினால் நாடு முழுவதும் குழப்பத்தைத்தவிர வேறு எதையும் பார்க்க முடியாது என்று வல்லபாய் பட்டேல் அரசியல் நிர்ணய சபையில் அகில இந்திய சேவைகளின் பங்கு பற்றி பேசியபோது குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற ஆட்சி முறை உள்ள எல்லா நாடுக ளிலும் தேசிய அளவில் ஒரு நிரந்தர நிர்வாகத்துறை அமைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே இந்தியாவிலும் இந்த நிர்வாகத்துறை அமைக்கப்பட்டது. ஐ.சி.எஸ். என்பது பெயர் மாறி இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) என்று ஆனது. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இதில் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரி மாவட்ட நிர்வாக நீதிபதியாகவும் செயல்படுகிறார். எனவே, அரசியல் நடுநிலையோடு இவர்கள் செயல்படுவதற்கு இந்த முறைகள் எல்லாம் உருவாக்கப்பட்டன.

இந்த முறையை ஏற்றுக் கொள்ளாத நேருவையே ஏற்க வைத்த பெருமை வல்லபாய் பட்டேலுக்கு உரியது. ஒரு நாட்டின் திட்டங்கள் நிறைவேற்றப்பட ஒரு வலிமையான நிர்வாக முறை மிக மிக அவசியம். இதை உணர்ந்துதான் ஜனநாயக நாடுகள் அனைத்திலும் இந்த முறை வலிமையாக உருவாக்கப்பட்டு நடுநிலையோடு செயல்பட வைக்கப்படுகிறது.

எதற்கெடுத்தாலும் வல்லபாய் பட்டேலை தனது முன்னுதாரணத் தலைவராகச் சித்தரிக்கும் மோடி உலகிலேயே அவருக்கு மிகப் பெரிய சிலை எழுப்பி அழகு பார்த்தவர். இப்போது அவர் கொண்டு வர உள்ள உத்தேச விதிகள் திருத்தத்தில் மாநிலங்களின் உரிமையை அலட்சியப்படுத்துவதும் அன்னியப் படுத்துவதும் எங்கெனம்? நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இந்திய ஆட்சிப் பணி மிக உதவிகரமாக அமையும் என்று சொன்ன லல்லபாய் பட்டேல் எங்கே? இன்று அதனை முழுவதுமாக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுபோகும் மோடி எங்கே? இது பட்டேலுக்கு செய்யும் துரோகம் அல்லவா?

டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியன் எதிர் இந்திய ஒன்றிய அரசு என்ற வழக்கில் ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் மற்றும் பிற அரசு ஊழியர்களின் தங்களது நம்பகத்தன்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட வாய்மொழி அறிவுரையின்படி செயல்பட வேண்டிய அவசியம் இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய ஒன்றிய அரசு என்ற வழக்கில் மாநிலங்கள் அரசியலமைப்புச் சட்டப்படியான ஒரு தனித்த, சுதந்திரமான இருப்பைப் பெற்றுள்ளது. ஒன்றிய அரசைப் போலவே, மக்களுடைய கல்வி, சமூக, அரசியல் மற் றும் பண்பாட்டு வாழ்வில் மாநில அரசுகளும் முக்கிய பங் காற்றி வருகின்றன. மாநில அரசுகள் ஒன்றிய அரசின் ஏஜெண்டாகவும் இல்லை என்று உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டியதையும் நினைவில் கொண்டால் மோடியின் அரசு மோதிப் பார்ப்பது நமது நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது என்பது விளங்கும்.

**தான் கொண்டிருக்கிற இந்துத்துவ வெறுப்பு கருத்தியலுக்கு இணக்கமாக செயல்படும் ஒரு போட்டி நிர்வாகமுறையை உருவாக்க ஆர்.எஸ். எஸ். அமைப்பும் சங்கப் பரிவாரங்களும் செயல்படுகிற இந்த நேரத்தில் கொண்டு வருகிற இந்த விதிகள் திருத்தம் அதற்காகவே பயன்படும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.**

கடந்த 2001ஆம் ஆண்டு மாநில அரசின் ஒப்புதலைக் கேட்காமல் மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளை ஒன்றிய அரசு தன்னிச்சையாக, அரசியல் காரணங்களுக்காக மாற்ற முடிவு செய்தது. இதை அன்றைய தமிழ்நாடு அரசு எதிர்த்தது.

டிசம்பர் 2020ல் மேற்கு வங்க ஐ.பி.எஸ். அதிகாரிகளை இதே போன்று ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ள முயன்றபோது, இதில் தலையிட்டு மேற்கு வங்க அரசு தடுத்து நிறுத்தியது.

ஏன்? கடந்த 2021ல் மேற்கு வங்க சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு மேற்கு வங்க அரசின் தலைமைச் செயலாளரை மத்தியப் பணிக்கு தன்னிச்சையாக மோடி அரசு எடுத்த போதும், அதனை அம்மாநில அரசு மிகக் காத்திரமாக எதிர்த்தது.

இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கிற அகில இந்தியப் பணி விதிகள் 6(1)ஐ தான் இன்று ஒன்றிய அரசு மாற்ற முனைகிறது என்றால் அவர்களது எண்ணம் நிர்வாகத்தை மேம்படுத்துவது அல்ல. மாறாக அதை செயல்படவிடாமல் நிர்மூலமாக்குவதே ஆகும்.

குஜராத் முதல்வராக இருந்தபோது, மாநில உரிமைகளுக்காக வாதாடிய மோடி, இன்று பிரதமரான பிறகு மாநில முதல்வர்களை, மாநில அரசுகளை தனக்கு விசுவாசமான எடுபிடிகளாய் மாற்றவே முயற்சிக்கிறார்.

இந்தப் போக்கு நாம் ஏற்றுக்கொண்ட மக்களாட்சி கொள்கைகளுக்கு நேர் விரோதமானது.

சர்வாதிகார நாடுகளின் வரலாற்றில் ஹிட்லரும், முசோலினியும் தத்தமது நாடுகளின் நாடாளுமன்றங்களை முதலில் முடக்கினர். பின்பு நீதிமன்றங்களை தனக்கான பிரச்சார மன்றங்களாக மாற்றினர்.

அதன் பின்பு நிர்வாகத்துறையை தனது நம்பகமான சகாக்கள் நிறைந்த துறையாக மாற்றிய பிறகுதான் தான் விரும்பிய வெறுப்பு அரசியல், இனப் படுகொலைகள், யூதர்களை கூட்டம், கூட்டமாக கொன்று பழி தீர்த்த சம்பவங்கள் அடுக்கடுக்காக நடந்தேறின. சட்டமும் காவல்துறையும் நிர்வாகத்துறையும் கை கட்டி வேடிக்கை மட்டும் பார்க்கவில்லை.

இம்மாபாதக படுகொலைகளை தன்னால் இயன்ற அளவும் நடத்தியது.

எனவே நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியமும், பண்பாட்டு பன்மைத்துவமும் உள்ள இந்தியாவில் ஜனநாயகம் மேலும் வலுப்பட வேண்டுமானால் இதுபோன்ற சர்வாதிகார முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும்.

அது முறியடிக்கப்படவில்லை என்றால், நமது ஜனநாயகம் ஊனப்படுவதுடன் நாட்டை பாசிச சர்வாதிகாரம் நோக்கி அழைத்துச் செல்லவே பயன்படும்.

சமூக நீதியும், வேலைவாய்ப்பும் தாய்மொழி உரிமைகளும் காக்கப்பட வேண்டுமானால் ஒன்றிய அரசு கொண்டு வரவுள்ள திருத்தத்தை ஒருங்கிணைந்து பெயர்த்தெறியும் பெரும் போராட்டங்களை நடத்தியாக வேண்டும்.

இளைய தலைமுறையே இதற்காக எழு!
முழு சக்தியைத் திரட்டிப் போராடு!

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 43

# கொடிய அரசிடமிருந்து குடியரசை மீட்போம்

நமது குடியரசுத் தலைவர், இந்திய குடியரசு தின உரையாற்றியிருக்கிறார்.

அதில் ''1930 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி முழு சுதந்திர நாள் என அறிவிக்கப்பட்டது. 1947 வரை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. எனவேதான் அரசியலமைப்புச் சட்டத்தை ஜனவரி 26ல் செயல்படுத்தினர். காந்தி அறைகூவல் விடுக்கும் போது 'நாம் அகிம்சை வழிப் போராட்டம் நடத்துகிறோம். ஜனவரி 26 முழு சுதந்திர நாளில் ஆக்கபூர்வமான வேலைகளை மேற்கொள்வோம். ஒருவரோடு ஒருவர் கரம் கோர்ப்போம்' என்று சொன்னார். இப்போதும்கூட அதே வழியில் குடியரசு தினம் கொண்டாடப்படுவதைத்தான் அவர் விரும்புவார்'' என்று கூறுகிறார்.

இப்போது நாட்டை ஆளும் பாஜகவின் முன்னோர்களும், அதனை இயக்குகிற ஆர்எஸ்எஸ்ஸும் முழு சுதந்திர நாளை 1930 தொடங்கி, 17ஆண்டு காலமும் கொண்டாடினார்களா அல்லது 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதிதான் தேசியக் கொடியை ஏற்றினார்களா எனக் கேட்டால் ''தேச விரோதி'' என முத்திரை குத்தப்படுவோம்.

இந்திய அரசியல் சட்டம், மதம், இனம், மொழி, ஜாதி பேதம் இல்லாமல் இந்தியர்கள் அனைவரையும் குடிமக்களாக ஏற்கிறது. அதனை மாற்றி குடியுரிமை திருத்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. அரசியலமைப்புச் சட்டப்படி சம உரிமை வேண்டும் எனக் கோரி தில்லியில் அமைதி வழியிலான ஆட்சேபனை இயக்கத்தை ஒருங்கிணைத்த 18 இளைஞர்கள் இரண்டு ஆண்டுகளாக பிணை கிடைக்காமல் 'ஊபா' சட்டத்தின் கீழ் சிறையில் வாடுகிறார்கள்.

அப்போது 'துரோகிகளைச் சுட்டுக் கொல்லுங்கள்' என ஆர்.எஸ்.எஸ். – இந்துத்துவா மதவெறித் தலைவர்கள் பகிரங்கமாகப் பேசி வன்முறையைத் தூண்டினர். 50 பேர் கொல்லப்பட்டனர்; ஏராளமான கடைகளும் வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இந்தக் கொடூர வன்முறையை, ஒன்றிய அரசின் காவல்துறை வேடிக்கை பார்த்தது மட்டுமின்றி, தானும் கூடச் சேர்ந்து வன்முறைத் தாண்டவம் ஆடியது. இவர்களில் யார் மீதும் ஒரு வழக்கு கூட பதிவாகவில்லை.

அந்த காவல்துறையை வானளாவப் புகழ்ந்து பேசி பாராட்டியவர் இன்று இந்தியாவில் உள்துறை அமைச்சராக இருக்கிறார். அவுரங்கசீப் வந்தால், அவருக்கு எதிராக இங்கு சிவாஜி தோன்றுவார் என்று இப்போதும் பேசி மதவெறியூட்டுபவர் பிரதமராக இருக்கிறார். ''ஒரு இந்து ரத்தம் சிந்தினால், நாங்கள் எஃப்ஐஆர் போட மாட்டோம்; ஒரு உயிருக்கு பத்து முஸ்லிம்களைக் கொன்று தீர்ப்போம்'' என்று பொதுக்கூட்டத்தில் பேசியவர் அடுத்த பிரதமராகத் தயாராகிறாராம்.

பீமா கோரேகான் நிகழ்வையொட்டி ஸ்டான் சாமி கைது செய்யப்பட்டு, உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையிலும் பிணை மறுக்கப்பட்டு சிறையிலேயே செத்துப்போனார். புகழ்மிக்க, திறன்வாய்ந்த அறிஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், நகர்ப்புற நக்சலைட்டுகள் என்ற பெயரில் ஆண்டுக்கணக்கில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு எதுவும் நடைபெறாமல் விசாரணை நிலையிலேயே பத்து இருபது ஆண்டுகாலம் கூட ஏராளமான இஸ்லாமியர்கள் சிறையில் வாடுகிறார்கள்.

எதிர்க்கருத்து வைப்பதற்கு முழுமையாக இடமளிப்பதுதான் ஜனநாயகத்தின் உயிர்நிலை ஆகும். ஆனால் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனை குரல் எழுப்பாமல் ஒடுக்குவதற்கான கொலைக் கருவியாக சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டம் (ஊபா) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய விவசாயத்தைப் பறித்து கார்ப்பரேட்டுகளிடம் கொடுப்பதற்கு வேளாண்மைச் சட்டங்களை இயற்றியது இந்த அரசு. ஓராண்டு காலம் போராடி 700 பேருக்கு மேற்பட்ட உயிர்களை பலி கொடுத்து விவசாயிகள், அவற்றைத் திரும்ப பெற வைத்தனர். ஆனால் இப்போது மீண்டும் அச்சட்டத்தை கொண்டு வருவோம் எனக் கூசாமல் அமைச்சர்கள் பேசுகிறார்கள்.

150 ஆண்டு காலமாகப் போராடி தொழிலாளர்கள் ஒவ்வொரு சட்ட உரிமையாக பெற்றார்கள். அவை மொத்தத்தையும் பறிப்பதற்காக 4 சட்ட தொகுப்புகளை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.


அகிம்சை, சகிப்புத்தன்மை, மக்கள் மீதான நேசம், சுயச்சார்பு, உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு, மத நல்லிணக்கம், எளிய வாழ்க்கை முறை, அப்பழுக்கற்று உண்மை பேசுதல் என காந்தி கொண்டிருந்த மேன்மையான குணங்கள் அனைத்துக்கும் நேரெதிரான கொள்கையும் நடைமுறைகளும் கொண்ட, கடைசியில் அவரையே கொன்ற இவர்கள் மகாத்மா காந்தியின் பெயரை உச்சரிக்கவே தகுதியற்றவர்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு, மதச்சார்பற்ற, ஜனநாயக, இறையாண்மை பெற்ற, சோஷலிசக் குடியரசாக இந்தியா மாற்றப்பட்டாக வேண்டும். மத வெறி, தீவிர வலதுசாரி, கார்ப்பரேட் அடிமை, சர்வாதிகார ஆட்சியாளர்களிடமிருந்து இந்தியாவை மீட்டெடுப்பதற்கு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாக வேண்டும்! அதையே இந்த ஆண்டு குடியரசு நாள் சூளுரையாக ஏற்போம்!

இந்தியக் குடியரசு நீடூழி வாழ்க!



பேராசிரியர். மு.நாகநாதன்




**இந்தியா விடுதலை பெற்ற பிறகு இயற்றப்பட்ட அல்லது பிரித்தானிய பேரரசிக்க அரசு நிறைவேற்றிய 1935 ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்திலிருந்து வெட்டி, ஒட்டப்பட்ட பெரும்பான்மையான சட்டப்பிரிவுகள் தான் இன்று நம்மை ஆட்சி செய்கின்றன. இரவில் பெற்ற இந்திய விடுதலை இன்னும் விடியவில்லை. மக்களுக்கு விடியலையும் வழங்கவில்லை.**

# ஆளுநர்களா?

## ஒன்றிய அரசின் அடியாட்களா?

பிரித்தானிய சட்டங்கள் தான் இன்றும் மக்களையும், மாநிலங்களையும் கோலோச்சுகின்றன. புகழ் பெற்ற அரசமைப்புச் சட்ட அறிஞர் கே.சி.வியர் கூட்டரசு என்ற நூலில் இடம் பெற்றிருக்கும் சட்டங்களை விட மிகவும் முதன்மையானது, நடைமுறையில் இருக்கிற சட்டத்தின் வழியாக ஆக்கப்பூர்வமான ஆட்சி இயலைப் பின்பற்றுவது தான் ஜனநாயக மாண்பினை உயர்த்தும் என்றார்.

தற்போது ஒன்றிய அரசின் மோடி ஆட்சியில் சட்டங்கள் எதிர்மறையாகப் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன.

நாடு அழிவுப்பாதையில் செல்லுகிறது என்பதை உலகளவில் நடுநிலையான ஊடகங்கள் தொடர்ந்து சுட்டி வருகின்றன. எதிர்மறை ஆட்சியின் ஒரு வடிவமாகத்தான் பல மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்கள் அமைந்து வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற மக்களவையின் முன்னாள் முதன்மை செயலாளர் திரு.பி.டி.டி.ஆச்சாரி ஆங்கில இந்து நாளிதழில் **(10-01-2022-page-6-)** ''சண்டை இடும் சில ஆளுநர் மாளிகைகள்'' **(Some Raj Bhavans on the war path)** என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

அக்கட்டுரையில் 1935ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியின் 50வது சட்டப் பிரிவை அப்படியே கண் மூடிக் கொண்டு 1950ஆம் ஆண்டின் 163பிரிவாக இணைக்கப்பட்டது. விடுதலைப் பெற்ற இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கும் ஆளுநர் களுக்கும் இந்தப் பிரிவு ஒரு தெளிவற்ற நிலையை உருவாக்கியது.

'சாம்சீர் சிங் நபாம் ரெபியா' வழக்கில் 2016 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம், மாநில அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் தான் தனது நிர்வாக முடிவுகளை ஆளுநர் எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதைத் திரு. ஆச்சாரி மேற்கோள் காட்டியுள்ளார்.

திரு அடல் வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யத் தேசிய ஆணையம் ஒன்றினை நீதிபதி வெங்கடசெல்லைய்யா தலைமையில் 2000 ஆம் ஆண்டில் நியமனம் செய்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜீவன் ரெட்டி நீதிபதி சர்க்காரியா, நீதிபதி கோட்டப்பள்ளி புன்னையா போன்றோரும் சட்ட இயல் அறிஞர் சோலி சொராப்ஜி போன்ற பல வல்லுநர்கள் இந்த ஆணையத்தில் இடம் பெற்றனர்.

இந்த ஆணையம் நீதிபதி கிருஷ்ண ஐயர் போன்ற பல ஆளுமைகள் உட்படப் பல சட்ட வல்லுநர்களின் கருத்துகளைக் கேட்டுப் பெற்றது. ஆளுநர் எப்படி நியமனம் செய்யப்படவேண்டும், அவர் தகுதி, எப்படிச் செயல்படவேண்டும் என இந்த ஆணையம் சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது. பல ஆய்வுகளை மேற்கொண்டு பலரின் கருத்துகளைப் பெற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் ஆளுநரை நிய மனம் செய்யும் முறையை ஏற்கிறோம்.

''எனினும் மாநிலத்தின் முதல்வரைக் கலந்து ஆலோசனைப்பெற்று குடியரசுத் தலைவர் ஆளுநரை நியமிக்க வேண்டும்.''

''5ஆண்டுகள் ஆளுநர் பதவியில் இருக்கலாம். ஆளுநரை மாற்றம் செய்தாலோ, பதவியிலிருந்து நீக்கினாலோ அந்தந்த மாநில முதல்வரை ஆலோசனை பெற்று முடிவெடுக்க வேண்டும்.''

''ஒன்றியமாநில உறவுகளை ஆய்வு செய்த நீதிபதி சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரையை ஆளுநரை நியமனம் செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.''

அந்தப் பரிந்துரைகள் ஆளுநர் எந்தத் துறையிலிருந்து தேர்ந்தெடுத்தாலும் சிறந்த ஆளுமை உடையவராக இருக்கவேண்டும்.

**வெளி மாநிலத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். மாநில அரசியலில் நெருங்கிய தொடர்பு உள்ளவராக இருக்கக்கூடாது. விலகியிருப்பவராக இருக்க வேண்டும். பொதுவாக அரசியலில் பெருமளவில் ஈடுபட்டவராக இருக்கக்கூடாது. குறிப்பாக, அண்மைக் காலத்தில் அரசியலில் இருந்தவராக இருக்கக் கூடாது. சிறுபான்மை சமூகத்தினருக்கு ஆளுநர் பதவிகளை அளிக்க வேண்டும்.**

''ஆளுநர் மாநிலச் சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க ஒரு காலவரையை இந்த ஆணையம் வலியுறுத்தியது.

ஆளுநர் ஆறு மாதத்திற்குள் தனது ஒப்புதலை அளித்தோ அல்லது தனது கருத்தைப் பதிவு செய்து குடியரசுத் தலைவரின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும்.''

''குடியரசுத் தலைவரின் ஆய்வுக்கு அனுப்பிய பின்னர், காலவரையறை பின்பற்றி, அதாவது மூன்று மாதங்களில் குடியரசுத் தலைவர் ஒரு முடிவைத் தெரியப்படுத்த வேண்டும். சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

அல்லது ஆளுநருக்கு அனுப்பி மாநிலச் சட்டமன்றத் திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும்

அல்லது இயற்றப்பட்ட சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 143 பிரிவிற்கு உட்பட்டதா என்பதை உச்ச நீதிமன்றத்தின் கருத்தைப் பெற வேண்டும்.'' இந்த இரண்டு ஆணையங்களும் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டன.

ஆனால் இன்றைய ஒன்றிய அரசின் ஆட்சியாளர்கள் திரு. வாஜ்பாயிக்கு ஓரளவுக்காவது மதிப்பு அளிப்பவர்களா இருந்தால் இந்த ஆணையம் வழங்கிய பரிந்துரைகளை ஏற்கத்தானே செய்வார்கள்.

மாநிலங்களும், ஒன்றிய அரசும் ஆக்கப்பூர்வமாக ஒத்துழைத்தால்தான் மக்களாட்சிக் கூறுகளை நாட்டில் காண முடியும்.

மாநில அரசுகளைப் பகை நாடுகளாகக் கருதி ஆளுநர்களை அடியாட்களாக மாற்றும் போக்கு இந்திய ஒற்றுமையை வீழ்த்தி விடுமே!

இன்றைய இக்கட்டான காலச்சூழலில் பெரும்பான்மையான மக்களின் வாழ்நிலையை உயர்த்தும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் அவசரமும், அவசியமும் பிரதமருக்கு உள்ளது.

மாநில அரசுகளும், ஒன்றிய அரசும் கைகோர்த்து பணியாற்ற வேண்டிய நேரத்தில் குறுகிய அரசியல் காரணங்களுக்காக அடாவடி அரசியலை பிரதமர் மோடி கைவிட வேண்டும்.

பல வல்லுநர்கள் குழுக்கள் அளித்த பார்த்துரைகளை ஏற்கவேண்டும். கூட்டாட்சி இயல் ஜனநாயக நெறிகளுக்கு எதிராக...

மாநில ஆட்சிகளின் நிர்வாகத்தில் தேவையற்ற முறையில் குறுக்கீடு செய்ய ஆளுநர்களை அனுமதிப்பது நாட்டைச் சீர்குலைவுப் பாதைக்கு எடுத்துச் செல்லும். பாசிசப் போக்கிற்கு வழிவகுக்கும்.

ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவதற்குப் பதிலாக ஆளுநர்களை அடியாட்களாக மாற்றும் ஒன்றிய அரசின் போக்குக் கூட்டாட்சி இயலையும் ஜனநாயகத்தையும் முற்றிலும் அழித்து விடுமல்லவா!


தத்துவார்த்தம் 14



எஸ். தோதாத்ரி

# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 2

# வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்திகள்



**பூகோளச் சூழல், கருத்துக்கள் ஆகியன வரலாற்றைத் தீர்மானிப்பதில்லை. தனிநபர்கள் தீர்மானிப்பதில்லை. பின் எவை தீர்மானிக்கின்றன? இதற்கு மார்க்சியம் தரும் விடை ஒன்றுதான். அது மனிதர்களது உழைப்புச் செயலின் விளைவு என்பதாகும். இதனை விரிவாகக் காண்போம்.**

அவ்வையாரின் பாடல் ஒன்று உண்டு. வான்குருவி, சிலந்தி, தேனீ ஆகியன போன்று மனிதர்களால் கட்ட முடியுமா? என்று அவர் அக்காலத்து போலிப் புலவர்களைப் பார்த்துக் கேட்பார்.

தூங்கணாங் குருவி அற்புத மான கூடு கட்டுகிறது, சிலந்தி மெல்லிய வலையைப் பின்னு கிறது, தேனீ தேன் கூட் டைக் கட்டுகிறது இந்தத் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும். இது இயற்கை. இவற்றிற்கு யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. ஒரு இயந் திரம் செய்வது போல இவை கூடு கட்டும். இது இயல்பூக்கம் சார்ந்தது.

ஆனால் இவற்றிற்கு மனிதனைப் போன்ற சமுதாய வாழ்க்கை இல்லை. முட்டையிடும் நேரத்தில் முட்டையிடும், அடைகாத்து குஞ்சு பொரிக்கும். இது ஒரு நேர்கோட்டில் நடந்துகொண்டிருக்கும். ஆனால் தேனீயானது எப்படி இருந்தாலும் அதே போன்ற கூட்டைத் தான் கட்டும், மாற்றிக் கட்டி விடாது. இது இயற்கை.

ஆனால் மனிதன் சமுதாயத்தில் வாழ்கிறான். அவனுக்கு சமூக விலங்கு என்று பெயர். இயல்பூக்கங்களுக்கும், உடல் செயல்களுக்கும்தான் அவன் இயற்கையைச் சார்ந்திருக்கிறான். ஆனால் சமுதாயம் என்று வரும்போது வேறுபடுகிறான். இங்கு அவன் இயற்கையிலிருந்து செயற்கைக்கு செல்கிறான்.

அதாவது அவன் உழைக்கிறான். அவ்வாறு உழைக்கும் பொழுது இயற்கையிலிருந்து செயற்கையாக பல பொருள்களை உற்பத்தி செய்கிறான். இது அவனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்துகிறது. அதாவது, அவன் இயற்கையில் இல்லாத ஒன்றைச் செய்கிறான். அது கருவிகளைச் செய்தல். இந்தக் கருவிகளின் அடிப்படையில் வரலாற்றை அறிஞர்கள் வகைப் படுத்துவர்.

கற்காலம், தாமிர காலம், இரும்புக்காலம், அணு யுகம், தகவல் தொழில்நுட்ப யுகம் என்று கூறுவர். இதில் முதன் முத லாக கண்டுபிடிக்கப்பட்ட கருவி நெருப்பு எனலாம். இதன் உபயோகம் தெரிந்த பின்னர்தான் உணவுப் பழக்கங்களில் மாறுதல் ஏற்பட்டது. அடுத்தது கல் கருவிகள்.

தமிழகத்தை எடுத்துக் கொள்வோம். ஆதிச்சநல்லூர், வைகை, கீழடி ஆகியவற்றில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சி பழைய கற்கால கருவிகள் இருந்ததைக் காட்டுகின்றன. உலகெங்கிலும் இது போன்று கற் கருவிகளைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். ஏன் நமது வீடுகளில் பயன்படுத்தும் அம்மி, குழவி, ஆட்டுரல் போன்றவை கருவிகள்தாம். இந்தக் கரு விகள் நீட்சி பெற்று இன்று மின்னணு கருவிகளாக மாறி உள் ளன. இவை ஒரு பெரிய சமுதாய மாறுதலையும், சிந்தனை மாறுதலையும் ஏற்படுத்தி உள்ளன.

கருவிகள் மட்டும் இருந்தால் போதாது, அவற்றைக் கொண்டு வேலை செய்வதற்கு பொருள்கள் வேண்டும். இவற்றை கச்சா பொருள்கள் என்கிறோம். இவை இயற்கையில் உள்ளவை. பருத்தியிலிருந்து கருவிகள் மூலம் ஆடை நெசவு செய்கிறோம். இதில் பருத்தி இயற்கை. ஆடை செயற்கை. இது போன்று பல பொருள்களை நாம் உற்பத்தி செய்கிறோம். இந்த மூலப் பொருள்களும், கருவிகளும் சேர்ந்ததை மார்க்சியம் உற்பத்தி சாதனங்கள் என்று அழைக்கிறது. இவை சமூக அமைப்பில் முக்கியப் பங்கினைப் பெறுகின்றன.

**இந்த உற்பத்தி சாதனங்கள் யாரிடம் இருக்கின்றன என்பதைப் பொறுத்து உற்பத்தி உறவுகள் அமைகின்றன. உற்பத்தி சாதனங்கள் இயற்கை சார்ந்தவை. ஆனால் உற்பத்தி உறவுகள் மனிதனை சார்ந்தவை. உற்பத்தி உறவுகள் பலவகைப் படும். மிகவும் பழங்காலத்தில் மனிதர்கள் உணவை சேகரித்தனர், கிடைத்ததை உண்டனர். இதில் மனிதர்களுக்கு உள்ள உறவு சமமான உறவு. உதாரணமாக குறிஞ்சி நில மக்களது உறவு அத்தகையது.**

பின்னர் கருவிகளை கண்டு பிடித்தனர். இப்பொழுது உற்பத்தி முறை மாறுகிறது. உபரி உற்பத்தியும் கிடைக்கிறது. கருவிகளை அவரவர்கள் சொந்தமாக வைத்திருந்தனர். எனவே அவர்கள் உற்பத்தி செய்தது அவர்கள் வசம் இருந்தது. இதிலும் ஒரு சமத்துவ நிலை இருந்தது.

இந்தக் கருவிகள் முன்னேறும்பொழுது கருவிகளைச் சிலர் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். இப்பொழுது கருவிகளின் சொந்தக்காரர்கள் ஒரு பிரிவினராகவும், உழைப் புக் கருவிகள் பயன்படுத்துபவர்கள் ஒரு பிரிவினராகவும் மாறினர். இதன்விளைவாக கருவிகள் இல்லாதவர்கள் கூலி உழைப்பாளிகளாக மாறினர். இப்பொழுது சமுதாயத்தில் சமமற்றநிலை ஏற்பட்டது. இவை வர்க்கங்கள் எனப்படுகின்றன.

பூர்வீகத்தில் இருந்த சமத்துவம் மறைகிறது. இந்த வர்க்கங்கள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்த அடிப்படையிலிருந்து இவற்றைப் பிரித்து காணக்கூடாது.

இந்த வர்க்கங்கள் மேலும் மேலும் வளர்ந்து பல கட்டங்களாக முன்னேறுகிறது. இவை நம் வரலாற்றை இயக்குகின்றன. இதனைத்தான் மார்க்ஸ் பல இடங்களில் கூறுகிறார்.

தொடர்புக்கு: 98947 83657

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

ஆட்சிக்கு வந்த பிறகு மதச்சார்பற்ற கொள்கையை விட்டுவிட்டு, அடிப்படை கொள்கையை விட்டுவிட்டு மதம்தான் ஆட்சி செய்யும், இந்திய நாடு இந்துக்கள் நாடாக மாற வேண்டும் என்று கூறி வருகின்றனர்.

நாட்டை பாதுகாக்க வேண்டுமென்றால் ஒன்றுபட்ட போராட்டமாக இருக்க வேண்டும். நாராயண குரு கேரளாவில் ஜாதிகள் இருக்கக் கூடாது என்று குரல் கொடுத்தவர். அவரை குடியரசு தின ஊர்தியில் வைக்கக் கூடாது என்று கூறியதற்கு காரணம் என்ன? கேரளாவில் பிறந்த சங்கராச்சாரியாரைத்தான் வைக்க வேண்டும் என்று கூறுவதன் மூலம் மதச்சார்பில் பா.ஜ.க. ஆட்சி செய்வது உறுதிப்படுகிறது. எனவே அரசியல் சாசனத்தின் அடிப்படையை பாதுகாக்க உறுதி கொள்ள வேண்டும் என்று நாம் முடிவெடுத்திருக்கிறோம். ஆக அந்த அடிப்படையில்தான் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்று பேசினார்.

**இரா.முத்தரசன் பேசியதாவது:**

தமிழ்நாட்டினுடைய விடுதலைப் போராட்ட வீரர்களை ஒன்றிய அரசு அவமதிப்பது தவறு. அனுமதிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்திற்கு மதிப்பில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு தலைமையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்த போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும் தளி சட்டமன்ற உறுப்பினருமான டி.ராமச்சந்திரனும் இடம் பெற்றிருந்தார். அப்போது தமிழக ஊர்திகளை அனுமதிக்காமல் இருப்பது சரியல்ல, அனுமதிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சரிடம் கூறியபோது, இந்த விஷயம் எனக்குத் தெரியாது, என்வென்று நான் கவனிக்கிறேன் என்று அவர் பதில் சொன்னார். இதெல்லாம் வியப்பாக இருக்கிறது.

தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றி நாம் எல்லோருக்கும் தெரியும். நம்முடைய கவிஞர் பாரதியார் நூற்றாண்டு விழா வந்தபோது, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, ரஷ்யா உள்ளிட்ட உலகத்தின் பல்வேறு நாடுகள் அந்த நூற்றாண்டு விழாவை கொண்டாடியதை நாம் அனைவரும் அறிவோம். அப்படி உலகப் புகழ் பெற்ற ஒரு மாபெரும் கவிஞனை, ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே என்று விடுதலை பெறுவதற்கு முன்னதாகவே ஆனந்தக் கூத்தாடிய பாரதி நிராகரிக்கப்படுகிறார்.

வெள்ளையனுக்கு எதிராக, வெள்ளை அரசாங்கத்திற்கு எதிராக கப்பல் விடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு இரண்டு கப்பல்களை வாங்கி ஓட்டிய கப்பலோட்டிய தமிழன், உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்த ஒரு நாட்டிலும், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, சிதம்பரனாருக்கு கொடுத்த தண்டனைபோல் எங்கும் கொடுக்கவில்லை. வரலாற்றில் நாம் பார்க்க வில்லை, படிக்கவில்லை. செக்கிழுக்கிற தண்டனை என்பது, வ.உ.சி.க்கு மட்டும் விதிக்கப்பட்ட தண்டனை ஆகும். வேறு யாருக்கும் இந்த தண்டனை விதிக்கப்படவில்லை.

அவர் தந்தை மிகப்பெரிய வழக்கறிஞர், வ.உ.சி.யும் மிகப்பெரிய வழக்கறிஞர். அவரது 30வது வயதிலேயே இரட்டை ஆயுள் தண்டனை. 40 ஆண்டு காலத்திற்கு சிறை தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தேசபக்தி மிக்க தலைவர்.

அதேபோல வேலுநாச்சியார் அவர்கள், விடுதலைப் போராட்டத்தில் வெள்ளையர்களை எதிர்த்து ஆயுதம் தாங்கி போராடிய ஒரு மாபெரும் வீராங்கனை. அவரோடு இருந்து பணியாற்றிய குயிலி ஒரு தலித் பெண். அவர் வேலுநாச்சியாருடன் இணைந்து போராடுகிறபோது, வெள்ளையர்கள் ஏற்பாடு செய்து வைத்திருந்த ஆயுதக்கிடங்கில், உடல் முழுவதும் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொண்டு, அந்த ஆயுதக் கிடங்கில் குதித்து ஆயுதக் கிடங்கையே அழித்த குயிலியை நாம் அனைவருக்கும் தெரியும்.

மருது சகோதரர்களைத் தெரியும், இவர்களையெல்லாம் நிராகரித்துவிட்டு இந்திய வரலாறு என்பது ஒன்று இருக்க முடியாது.

ஒன்றிய அரசு இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாறையே மூடி மறைத்துவிட்டு, நிராகரித்துவிட்டு மனுதர்ம ஆட்சியை நிலைநாட்ட மேற்கொண்டிருக்கிற முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அன்றைக்கே கண்டித்து 17ஆம் தேதியே தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு குடியரசு தின விழாவை கொண்டாடுகிற அதே நேரத்தில் ஒன்றிய அரசாங்கத்தின் இத்தகைய புறக்கணிக்கிற, அவமதிக்கிற செயலை கண்டித்து இங்கே நாம் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெறுகிறது.

திராவிடர் கழக தலைமை அலுவலகம் உள்பட பல்வேறு அரசியல் கட்சி அலுவலகங்களிலும் நடைபெறுகிறது என்பது மட்டுமல்லாமல் டெல்லியில் நிராகரிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட அந்த ஊர்திகள் இன்று நமது மாநிலத்தில் சென்னையில் நடைபெற்ற அணிவகுப்பிலே பங்கு பெற்றது மட்டுமல்லாமல், இந்த ஊர்திகள் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் என்று முதலமைச்சர் அறிவித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

அந்த ஊர்திகள் ஆங்காங்கே வருகிறபோது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அந்த ஊர்திகளுக்கு மிகச் சிறப்பான வரவேற்பை அளித்து அந்த தலைவர்களுக்கு நாம் வீர வணக்கத்தை தெரிவிக்க இருக்கிறோம் என்பதை தெரிவித்து ஒன்றிய அரசின் அடாவடிச் செயலைக் கண்டித்து இப்போது கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார்.



பினாய் விஸ்வம்

**அளவில் பெரிய உபி, அளவில் சிறிய கோவா உட்பட ஐந்து மாநிலங்களின் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்கள் தீர்மானகரமான அரசியல் களம் அமைத்துள்ளன. இம்மக்கள் அளிக்கும் தீர்ப்பு நிச்சயம் 2024ல் வரஉள்ள முக்கியமான மிகவும் தீர்மானகரமான அரசியல் போர்களத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். எனவேதான் அனைத்து அரசியல் கட்சிகளும் இத்தேர்தல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றன. சிலர் அதனை 2024க்கான ஒத்திகை என்கிறார்கள்.**



# மதச்சார்பற்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஒரு வரலாற்று போர்

சட்டமன்றத் தேர்தல்களுக்கான தயாரிப்புகள் மற்றும் பிரச்சா ரங்கள் கோவிட் 19 மற்றும் அதன் உருமாற்றம் பெற்ற 'ஓமைக்காரன்' தொற்றுப் பரவலின் பின்னணியில் நடை பெறுகின்றன. இந்தியத் தேர்தல் ஆணையமும் அதைக் கருத்தில் கொண்டே பல கடுமையான கட்டுப்பாடு வரைய றைகளை விதித்துள்ளது.

ஆனால் தேர்தல்களைப் பதுக்கி வைத்த கறுப்புப் பணத்தின் பெரும் விழாக் கொண்டாட்டம் எனக் கருதும் சக்திகள் அந்தக் கட்டுப்பாடுகள் குறித்து மகிழ்ச்சி அடையவில்லை. அவர்கள் நிச்சயம் பல வழிகளிலும் தேர்தல் வழிகாட்டு ஒழுங்கு கட் டுப்பாடு நெறிகளை மீறுவார்கள்.

தொற்றுப் பரவலின் கடுமையான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப அரசியல் சட்ட அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கறையுள்ள இந்தியர்கள் தேர்தல் ஆணையத்தை ஆவலோடு எதிர்நோக்குகிறார்கள்.

பெருந்தொற்று காலத்தின் சவால்களை எதிர்கொள்ள தேர்தல் ஆணையம் தவறினால் அதன் விளைவு மோசமான அழிவாகி விடும். மக்களின் பாதுகாப்பே தலையாய முக்கியத் தும் உடையது அனைத்து வழிகளிலும் அது பாகாக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு தேர்தலின் சாரமும் அரசியலே. பகுப்பாய்வின் இறுதியில் அது தத்துவங்கள் மற்றும் கருத்துகளின் மோதல் களே. வலதுசாரி சக்திகள் தங்கள் அரசியலின் உள்ளடக்கத்தை வகுப்புவாத, சாதிய வற்புறுத்தல் மூலம் ஏமாற்றி மாற்றியமைக்க எப்போதும் முயலும். மக்களின் அரசியல் எழுச்சி உணர்வைக் கடத்திச் செல்ல பண பலம் மற்றும் வன்முறை ஆள்பலத்தை அவை தாராளமாகப் பயன்படுத்தும். அத்தகைய அபாய கட் டத்தை அடைந்துள்ள இந்திய ஜனநாயகத்தைச் சாதாரண நடவடிக்கைகள் மூலம் காப்பாற்ற முடியாது. இத்தகைய சிக்கல் களுக்கு மத்தியில்தான் சிபிஐ கட்சியும் இதர இடதுசாரி சக்தி களும் எதிர்வரும் தேர்தல் களத்தைச் சந்திக்கத் தயாரா கின்றன.

இந்த ஐந்து மாநிலங்களிலும் இடதுசாரிகள் முக்கியமான பலம்பொருந்தியசக்திகள் அல்லஎன்பதைச்சிபிஐநன்கு உணர்ந் துள்ளது. அதே நேரத்தில் அவை வெறும் பார்வையாளர்கள் மட்டுமில்லை. இந்த அனைத்து மாநிலங்களிலும் நடந்த மக்கள் இயக்கப் போராட்டக் களங்களில் சிபிஐ கட்சியும் இடதுசாரி கட்சிகளும் எப்போதும் முனையிலே முன்நின்றன. தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சாதாரண பிரிவு மக்களின் இயக்கங்களைக் கட்டியமைக்க வரலாறு நெடுக அவை உறுதியாக நிற்கின்றன; ஜனநாயகம் மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாக்க ஏனைய மதசார்பற்ற ஜனநாயகச் சக்திகளோடு கரம் கோர்த்து களம் காண்கின்றன.

**நம்பகத்தன்மை உடையவர்கள் இடதுசாரிகள் என்று அதன் அரசியல் எதிரிகளாலும் கருதப்படுகின்றனர். பெரும் பணக் காரர்கள், கார்ப்பரேட்டுகள் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரே அரசியல் சக்தியாகக் கம்யூனிஸ்ட்களை மக்கள் கருதுகிறார்கள். தொடர்ந்த போராட்டங்கள் மற்றும் தியாகத்தால் பெற்ற அந்த நம்பிக்கையின் அளவு, சட்டமன்றங்கள் மற்றும் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட்கள் பெற்றுள்ள எண்ணிக்கையைவிட மிக மிகப் பெரியது. தேர்தல் போராட்டக் களத்திலும் சிபிஐ கட்சியும் இடதுசாரியினரும் செல்வாக்கு செலுத்தும் பகுதிகளைப் பெற்றுள்ளனர்.**

மேலே குறிப்பிட்ட அனைத்து அம்சங்களின் அடிப்படையில் சிபிஐ மற்ற இடதுசாரி கட்சிகளுடன் எதிர்வரும் தேர்தல்களைச் சந்திக்கத் தயாராகிறது.

வலதுசாரி தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் முன்னே நிற்கிறது என்பதில் சிபிஐ பெருமிதம் கொள்கிறது. ஆர்எஸ்எஸ் வழிகாட்ட லில் செயல்படும் பாஜக அரசின் பாசிச குணத்தை கொள்கை தெளிவுடன் இந்தியாவின் மதசார்பற்ற ஜனநாயகத்திற்கு முக்கிய முதல் எதிரி ஆர்எஸ்எஸ் – பாஜகதான் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அடையாளம் கண்டு வரையறுத்தது.

மேலும் ஆர்எஸ்எஸ் பாஜக ஏற்படுத்தும் பாசிச அபாயத்தை வலிமையுடன் எதிர்க்க நாட்டின் மதசார்பற்ற, ஜனநாயக மற்றும் இடதுசாரிகள் சக்திகள் அனைத்தும் கூட்டாக இணைந்து பரந்துபட்ட அணியை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி முதலில் முன்வந்து வேண்டுகோள் விடுத்த கட்சியும் சிபிஐ தான். அந்த வேண்டுகோள் எதிர்வரும் தேர்தல்களில் தற்போது மேலும் கூடுதல் பொருத்தமுடையதாக உள்ளது.

அப்படிப் பரந்துபட்ட அரசியல் மேடையை அமைப்பது நிறைவேற்றப்பட்டால், ஐந்து மாநில தேர்தல்களிலும் பாரதிய ஜனதா கட்சியை நிச்சயம் தோற்கடிக்க முடியும். பரந்துபட்ட தேர்தல் கூட்டணியை அமைக்கும் முயற்சியில் கட்சிகளுக்கு இடையே, நான் பெரியவன் என்ற மோதல்களும், மேலாதிக்கப் போக்குகளும் தலை தூக்கி இடைமறிக்கும். வரலாற்றின் நெருக்கடியான முக்கிய தருணங்களில் இத்தகைய எல்லா போக்குகளும் எப்போதும் தற்கொலை முயற்சியாகி, அப்போ தெல்லாம் அவை எதிரிக்கே உதவி இருக்கின்றன என்பது நமது அனுபவம்.

சமீப கால பல்வேறு நிகழ்வுகள், பாரதிய ஜனதா கட்சி இனியும் தோற்கடிக்கப்பட முடியாத கட்சி அல்ல என்பதைப் பறைசாற்றுகின்றன. முறையான அர்த்தமுள்ள வகையில் கட்சி களுக்குள் உடன்பாடு காணப்பட்டால் பாஜகவைத் தோற்கடிக்க முடியும். நம் அனைவருக்கும் ஊக்கமும் உற்சாகமும் தரும் நம்பிக்கை ஊற்று, சமீபத்திய விவசாயிகளின் சரித்திரப் புகழ் பெற்ற போராட்டமும் அதில் விவசாயிகள் அடைந்த நின்றதிர்ந்து ஒலிக்கும் மாபெரும் வெற்றியும் ஆகும்.

விவசாயிகளின் வெற்றிகரமான போராட்டத்தின் மிகப் பெரிய பாடங்களில் முக்கியமான ஒன்று ஒற்றுமை பற்றியது. பல வகையான வேறுபாடுகள் இருந்தாலும், அவற்றைத் தாண்டி 400க்கும் மேற்பட்ட விவசாய அமைப்புகள் பொதுவான மேடையில் ஒன்றாக இணைந்து நின்றார்கள். அவர்களை ஒன்றுபடுத்திய அம்சம், கருப்பு வேளாண் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை. மிகக் கடுமையான, ஏற்ற இறக்கமான சூழல்களைச் சந்தித்த எல்லா தருணங்களிலும் போராட்ட ஒற்றுமையை உருக்குபோல கட்டிக் காப்பதில் அவர்கள் கவனமாக இருந்தனர்.

பாஜகவை எதிர்த்துப் போரிடும் அரசியல் கட்சிகள், தேசத் தின் விவசாயிகள் இணைந்து நடத்திய ஓராண்டிற்கும் மேல் நீடித்தப் போராட்ட அனுபவங்களிலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் உண்டு. ஏற்ற லட்சியத்தில் உறுதிப்பாட்டோடு இருந்தால் அவர்கள் பாஜகவைத் தோற்கடிப்பது சாத்தியம்.

**பாஜக ஆட்சி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தி பேரழிவில் தள்ளிவிட்டது, மக்கள் சலித்துப்போய் நம்பிக்கை இழந்து விட்டார்கள். வேலை- யில்லாத் திண்டாட்டம் என்றுமில்லா வேகத்தில் அதிகரித்தபடி உள்ளது. விலைவாசி விண்ணை எட்டுகிறது. கோடான கோடி மக்களுக்கு வாழ்வின் அடிப்படைத் தேவைகளே மறுக்கப்படுகிறது. பணக்காரர்களுக்கும் ஏழை களுக்குமான பிளவு அகல பாதாளமாகிறது. மக்களுக்கு ஒரு மாறுதல் தேவை. அவர்கள் பாஜகவின் மோசமான ஆட்சிக்கு முடிவு காண விரும்புகிறார்கள்.**

உத்தரப் பிரதேச மாநில பாஜக கட்சியில் சமீபத்தில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் விலகல் போன்ற நிகழ்வுப்போக்குகள், மக்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பே தவிர வேறில்லை. மக்களின் விருப்பம் மற்றும் எதிர்பார்ப்பு எண் ணங்களுக்கு மதசார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி சக்திகள் நேர்மறையாகச் செயலாற்றுவார்கள் என மக்கள் அவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள்.

அப்படி மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப எதிர்க்கட்சிகள் ஒன்று பட்டு எழுவார்கள் எனில், இந்திய மதசார்பற்ற ஜனநாய கத்தைப் பாதுகாக்கும் போரில் மக்கள் வெல்வார்கள்! நாடு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது!

தமிழில்: **நீலகண்டன்**

# நெல் விற்பனைக்கு முன்பதிவு செய்யும் ஆணையைத் திரும்பப் பெறுக

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வேண்டுகோள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

நடப்பு சம்பா நெல் பயிர் அறுவடை தொடங்கியுள்ள நிலையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் புதிய உத்தரவால், விவசாயிகள் பலர், அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்திட இயலாத சூழல் உள்ளது.

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய வேண்டுமெனில் 15 நாட்களுக்கு முன்னரே இணையவழி மூலம் முன்பதிவு செய்திட வேண்டும். சில நாட்களுக்கு பின்னர் வாணிபகழகம் எந்த டி.பி.சி.யில் விற்பனை செய்வது? எந்தநாள் கொண்டு வருவது? என்பதுடன் வரிசை எண்ணும் வரும். அந்த குறிப்பிட்ட நாளில் மட்டும் தான் அந்த விவசாயி, தான் அறுவடை செய்த நெல்லை விற்க முடியும் என்ற உத்தரவு நடைமுறைக்கு சாத்தியமானது அல்ல. இதனால் எண்ணற்ற விவசாயிகள் வியாபாரிகளிடம் மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஏனெனில் நடைமுறை சிக்கல்கள் பல இதில் உள்ளன.

விவசாய தொழிலாளர்கள் போதுமான அளவு கிடைக்காத நிலையில் இருதடவை ஏற்றி இறக்க கூடுதல் செலவு ஏற்படும். விவசாயிகள் விற்பனைக்கான பதிவு செய்ததற்குபின் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் இந்த விவசாயிக்கு சாகுபடி உறுதிச் சான்று அளித்தபின் தான் நெல் விற்பனைக்கு அனுமதி கிடைக்கும். காவிரி டெல்டா மாவட்டங்களில் குத்தகை விவசாயிகளே அதிகமாக உள்ளனர். இவர்களில் பலருக்கு உறுதிச்சான்று அளித்திட நிர்வாக அலுவலர்களிடம் உரியபதிவு இல்லை.

இந்த சான்றுக்காக அலைச்சலும் பணவிரயமும் விவசாயிகளுக்கு ஏற்படும். வெளி மாவட்டங்களில் மிகக் குறைந்த விலைக்கு நெல் மூட்டைகளை வாங்கி டெல்டா மாவட்டங்களில் விற்பனை செய்யும் வியாபாரிகளை தடுக்கவே இந்த ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது.

டெல்டாவின் அருகாமை மாவட்டங்களிலும் அரசு கொள்முதல் நிலையங்களை திறந்து இதை தடுக்கலாம்.

கொள்முதல் நிலையங்கள் தோறும் அறிவிக்கப்படும் கண்காணிப்பு குழுவை அந்தந்த கிராம விவசாயிகளை கூட்டி கொள்முதல் ஒழுங்குமுறைகளை அறுதியிட்டால் அதிகாரமிக்க குழுவாக இது செயல்படும். இதன் மூலம் கொள்முதல் தவறுகளை தடுக்கலாம் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

## இங்கிலாந்தில் பென்னிகுயிக் சிலை அமைப்பு - தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் பாராட்டு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

தென்தமிழக மக்களின் குடிநீர் மற்றும் விவசாயிகளின் பாசன பயன்பாட்டிற்கு... அடிப்படையான முல்லைப் பெரியாறு அணையை.. அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்கள் மத்தியில், மனிதநேயம் கொண்டு சறுக்களையே சாதனையாக்கி கட்டி முடித்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் உருவச்சிலை இங்கிலாந்து நாட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள தமிழக அரசுக்கும் தங்களுக்கும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டின் எல்லை தூரங்கள் நம்மை விலக்கி வைத்தாலும்... மனிதநேயம் நம்மை ஒன்றுபடுத்துகிறது என்பதை வெளிப்படுத்தும் முறையில். அதுவும் அவர் பிறந்த ஊரான கேம்பர்வி நகரப்பூங்காவில் அமைப்பது என்பது மிகபொருத்தம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.



# சங்கே முழங்கு!

## அரசு மருத்துவர்களுக்கான ஊதிய உயர்வு கோரிக்கையை நிறைவேற்றுக!



**சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்**

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் தங்களது ஊதியத்தை உயர்த்திட வேண்டும் என்ற கோரிக்கையை நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர். பல கட்டப் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். அகில இந்திய அளவில் தமிழகம் மருத்துவத் துறையில் தொடர்ந்து பல பரிசுகளை பெறுகிறது. அதில் மருத்துவர்களின் பங்கும் உள்ளது. ஆனால் இந்தியாவிலேயே மிகக் குறைவான ஊதியத்தை பெறுபவர்கள் தமிழ்நாடு அரசு மருத்துவர்களாகவே உள்ளனர். இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

கொரோனாவை கட்டுப்படுத்துவதிலும், கொரானாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதிலும் தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சிறப்பான சேவையை செய்துள்ளனர். தங்களது உயிரையும் துச்சமாக கருதி பணியாற்றியுள்ளனர். பலர் கொரோனாவால் உயிரிழந்தும் உள்ளனர். சேவை உள்ளத்தோடு பணிபுரியும் நமது அரசு மருத்துவர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலம் கடத்தாமல் அவர்களது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும். கடலூர் அரசுமருத்துவக் கல்லூரி (சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி) பயிற்சி மருத்துவர்களுக்கு, இதர தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக பயிற்சிக் கால உதவி ஊதியத்தை வழங்கிட வேண்டும்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அவர்களை தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சர் அழைத்துப் பேசி பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகமும், கல்லூரி நிர்வாகமும் பயிற்சி மருத்துவர்களை மிரட்டும் போக்கை கைவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களுக்கும், பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கும் உரிய நேரத்தில் பயிற்சிக்கால ஊதியம் வழங்கப்படாத போக்கு தொடர்ந்து நீடிக்கிறது. இக்குறைபாட்டை போக்கிட வேண்டும். உரிய நேரத்தில் அவர்களுக்கு ஊதியம் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

தமிழகத்தில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங் இணையவழியாக நடைபெற உள்ளது. இத்தகைய இணையவழி கவுன்சிலிங் வெளிப்படைத்தன்மையை இல்லாமல் செய்துவிடுமோ, முறைகேடுகளுக்கு வழி வகுத்துவிடுமோ என்ற அச்சம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தரப்பில் ஏற்பட்டுள்ளது.

எனவே இணைய வழி கலந்தாய்வில் முழுமையான வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட வேண்டும். முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கை கவுன்சிலிங்கில், மருத்துவ மாணவர்கள் தெரிவு செய்யும் விருப்பப் பட்டியலை, பிற மாணவர்கள் அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு மாணவர் பதிவிட்ட சாய்ஸ் பட்டியல் அதாவது எந்த படிப்பில், எந்த மருத்துவக் கல்லூரியில், எந்த வரிசையில் பெற விரும்பி ,விருப்பப் பட்டியலில் பதிவிட்டுள்ளார் என்ற விவரத்தை மற்ற மாணவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்கிட வேண்டும்.

முழுமையான வெளிப்படைத் தன்மையை அனைத்து வகைகளிலும் கடைபிடிக்க வேண்டும்.

முதல் முறையாக இணைய வழி கலந்தாய்வு நடத்துவதால் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக “முன்னோட்ட இணைய வழி கலந்தாய்வு பயிற்சி “ வழங்கிட வேண்டும்.

ஏற்கனவே இருந்ததுபோல், தமிழக அரசு மருத்துவ கல்லூரிகளில்உள்ள, உயர்சிறப்புமருத்துவப்படிப்புஇடங்களில் 100 விழுக்காடு இடங்களும், தமிழக மாணவர்களுக்கே கிடைத்திடவும், அதில் 50 விழுக்காடு இடங்கள் அரசு மருத்துவர்களுக்கு கிடைத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும். இவ்வாறு சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.



என்.எஸ். பிரதாப் சந்திரன்



# பாலம் கிடைக்குமா? பாவப்பட்ட மக்களுக்கு?

**திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் காரனோடையில் இருந்து. சீமாவரம் செல்லும் சாலையில். ஞாயிறு ஊராட்சி கொற்றலை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்து வன்னிப்பாக்கத்துடன் இணைக்க வேண்டும் என்று நீண்ட காலமாக பொதுமக்கள் கோரி வருகின்றனர்.**

காலங்காலமாக மக்கள் இந்த ஆற்று வழியைத்தான் பயன்படுத்தி வருகின்றனர். ஆற்றில் நீர் ஓடும் மழைக்காலங்களில் மக்கள் இந்தப் பாதையை பயன்படுத்த முடியாத சூழலில் புழல்,சோழவரம் ஒன்றியத்தை சேர்ந்த ஞாயிறு, மாபுஸ்கான் பேட்டை, புதுப்பாக்கம், அருமந்தை, நெற்குன்றம், பூதூர், பெருங்காவூர், சிருங்காவூர், கண்ணம்பாளையம், விளாங்கடுபக்கம், வடபெரும்பாக்கம் போன்ற 10க்கும் மேற்பட்ட ஊராட்சிகளை சேர்ந்த மக்களும், சென்னை மாதவரம், மூலக்கடை பகுதி சார்ந்தவர்களும் பொன்னேரிக்கு செல்வதற்கு முடியாமல் சிரமப்படுகின்றனர்.

இதனால் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், அரசு கலைக்கல்லூரி, அரசு வட்டப் பொது மருத்துவமனை, நீதிமன்றங்கள் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு செல்வதில் பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

இதேபோன்று மீஞ்சூர் ஒன்றியம் வன்னிப்பாக்கம், நாலூர், சிறுவாக்கம், அனுப்பம்பட்டு, தடபெரும்பக்கம் உள் ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் சென்னை ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை அரசு பொது மருத்துவ மனை, கோயம்பேடு மார்க்கெட், பேருந்து நிலையம், விமான நிலையம் போன்றவற்றை சென்றடைய தச்சூர் கூட்டுச்சாலை காரனோடை வழியாகவே சுற்றிக் கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை நீடித்து வருகிறது.

மேற்கண்ட சோழவரம், மீஞ்சூர், புழல் ஒன்றியங்களை சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் ஞாயிறு வன்னிப்பாக்கம் கிராமங்களை இணைக்கும் வகையில் கொசஸ்தலை ஆற்றில் மேம்பாலம் அமைக்க வேண்டும் என மக்கள் நீண்ட காலமாகக் கோரி வருகின்றனர்,

இதனை அரசும் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட இடத்தையும் பொதுப்பணித்துறை, நீர்வளத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக இருந்த சுந்தரவல்லி அவர்களும் நேரில் ஆய்வினை மேற்கொண்டு மேற்கண்ட இடத்தில் மேம்பாலம் அமைத்திட திட்ட அறிக்கையை தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் 2016 ஆம் ஆண்டு 15 கோடியில் மேம்பாலம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மேற்படி மேம்பால பணிகளுக்கு இடையூறாக இருந்த மூன்று குடிசை வீடுகளுக்கு காலி செய்ய நோட்டீஸ் அனுப்பப்பட்டது இதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று இடம் வழங்க வன்னிப் பாக்கம் ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்படும் மக்கள் மாற்று இடத்தை பெற்றுக்கொள்ள சம்மதித்தனர்.

இந்நிலையில் மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற போதிய நிதி இல்லை என திட்டம் கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. ஆனாலும் பொதுமக்கள் விடாமல் தொடர்ச்சியாக மனு கொடுத்து மேம்பாலத்தை கோரி வந்தனர்.

இந்நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திமுக தலைமையிலான தற்போதைய தமிழக அரசு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை கவனத்தில் கொண்டு. நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 18 கோடியே 50 லட்சத்தில் மேற்கண்ட மேம்பாலத்தை ஞாயிறு ஊராட்சியில் அமைக்கப்படும் என அறிவித்துள்ளது.

இது மக்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த மகிழ்ச்சி மக்களுக்கு நீண்ட நாள் நீடிக்காத வகையில், சில உள்ளடி வேலைகள் நடப்பதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அதற்கு காரணம் சோழவரம் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த இரண்டு தீர்மானங்களும் பாலத்திற்கான மக்களின் கனவை வெடிவைத்து தகர்க்கிறது.

தீர்மான எண் 196, ந. க. என் 23 27 / 2021 இதில் “சோழவரம் ஊராட்சி ஒன்றியம் காரனோடை முதல் சீமாவரம் செல்லும் நெடுஞ்சாலையில் 10.50 வது கிலோ மீட்டரில் கொசஸ்தலை ஆற்றில் ஆற்றின் குறுக்கே மீஞ்சூர் ஒன்றியத்தை சேர்ந்த நாலூர் ஊராட்சியில் கம்மவார்பாளையம் வழியாக திருவொற்றியூர் நெடுஞ் சாலையை இணைக்கும் வகையில் உயர்மட்டம் மேம்பாலம் நபார்டு திட்டத்தில் அமைக்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது “என தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதே கூட்டத்தில் மற்றொரு தீர்மான எண் 204, ந. க. என். 2017/ 2021/ ஆ2 இதில் “சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் காரனோடை முதல் சிமாவரம் சாலையில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே, நாலூர் கம்மார் பாளையம் செல்லும் சாலைக்கு உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிக்கு. டீடைல்ஸ் புராஜெக்ட் ரிப்போர்ட் வழங்க கோரப்பட்டுள்ளது.

அதற்கான செலவுத் தொகை ரூபாய் 3 லட்சம் மட்டும் ஒன்றிய பொது நிதியிலிருந்து முன் பணமாக வழங்க ஒன்றியக் குழுவின் ஒப்புதல் எதிர்நோக்கி வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கூறப்படுகிறது” என உள்ளது.

அரசு வழங்கிய உத்தரவு அணையில் டி.ஆர்.டி. சி.பி.ஆர், எல்.ஆர்.எண் 22 899/2020/ டி.வி.எல்., இதில் 18.50 கோடியில் ஞாயிறு ஊராட்சியில் மேம்பாலம் அமைக்கப்படும் என தெளிவாக உள்ள நிலையில்.மேற்கண்டமேம்பாலத்தை, மீஞ்சூர் ஒன்றியம் கம்மவார் பாளையத்திற்கு வழி மாற்றும் அதிகாரத்தை சோழவரம் ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு வழங்கியது யார்?

**இப்படி மாற்றும் அதிகாரம் ஒன்றிய ஆணையருக்கு, ஒன்றிய குழு தலைவருக்கு உள்ளதா? தமிழக அரசு சட்டமன்றத்தில் அறிவித்த ஒரு திட்டத்தை ஒரு ஒன்றியக்குழு தீர்மானத்தின் மூலமாக மாற்ற முடியுமா?**

**தமிழக முதல்வரை விட அதிகாரம் மிக்கவரா ஒன்றிய குழுத்தலைவர்.**

இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? இதை தமிழக அரசு அனுமதிக்கிறதா? என்கிற பலமான கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது?

பத்திற்கும் மேற்பட்ட ஊராட்சி பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்பையும், கொதிப்பையும் ஏற்படுத்தி தமிழக அரசுக்கு எதிராகப் மக்கள் போராடும் ஒரு சூழ்நிலையை உருவாக்கும் இந்த தீர்மானத்தை கொண்டு வருவதற்கு காரணமான சூத்திரதாரிகள் யார்? இவர்கள் மீது தமிழக அரசின் நடவடிக்கை பாயுமா? அல்லது அந்தக் சூழ்ச்சியாளர்களின் சூழ்ச்சி வலையில் தமிழக அரசு சிக்குமா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது. எனவே தமிழக அரசு கெடுமதி யாளர்களின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஞாயிறு வன்னிப்பாக்கம் இடையிலான மேம்பாலத்தை உடனடியாக அமைத்து தர முன்வர வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்களின் கனவு நிறை வேறுமா? கானல் நிகராகுமா?

என்ற கேள்விகளோடு போராட்டக் களத்திற்கு மக்கள் தயாராகிறார்கள்.

தொடர்புக்கு: **93826 79798**



டி.ராஜா

# இந்தியக் குடியரசின் அடித்




# கூட்டாட்
# பாதுகா

**நமது இந்தியத் திருநாட்டை இறையாண்மைமிகு ஜனநாயக குடியரசாக பிரகடனப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 72 ஆம் ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கிறோம். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் இருந்து நமது நாடு விடுதலைப் பெற்ற 75 ஆம் ஆண்டு இது. இன்றைய ஆட்சியாளர்கள் இந்த நிகழ்வை ‘விடுதலை நாள் பெருவிழாவாக’ கடைபிடித்து வருகிறார்கள்!**

வரலாற்றைத் திரிப்பதன் மூலம் ஆட்சியாளர்கள் தங்களது வகுப்பு வாத செயல்திட்டத்தை மேலும் முன்னெடுக்க மேற்கொள்ளும் முயற்சிகள் காரணமாக அவர்களின் இந்த விடுதலைத் திருநாள் கொண்டாட்டங்கள் சர்ச்சைகளில் சிக்கியுள்ளன.

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் எவ்வித பங்களிப்பும் செய்திராத ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் இதர அமைப்புகள் இன்று தேசப்பற்று மற்றும் தேசிய உணர்வுக்கான சான்றிதழ்களை வழங்கி வருகின்றன! விடுதலைப் போராட்ட இயக்கத்தின் பன்மைத்துவத்தை அவர்கள் தங்களின் ஒற்றைத்தன்மை கொண்ட இந்துத்துவ கட்டமைப்பிற்குள் அடைத்துவிட முயலுகிறார்கள். அவர்களின் இந்தச் செயல் நமது மாபெரும் விடுதலைப் போராட்டத்தின் சீர்மிகு பாரம்பரியத்திற்கும், அதன் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள அரசியலமைப்பிற்கும் ஊறு விளைவித்து வருகிறது.

1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் நமது நாடு குடியரசாக உதயமானதும், அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அந்தத் தருணமும், அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் மிளிரும் ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்‘ மற்றும் நீதி உள்ளிட்ட உயரிய இலட்சியங்களை வென்றெடுப்பதற்கான தணியாத தாகம் நிறைந்த பயணமும், நமது தேசத்திற்கான மிகப்பெரிய நடவடிக்கைகள் ஆகும்.

பிரிட்டிஷாருக்கு எதிரான நமது போராட்டம் பின்னடைவுகளையும், பெரும் வெற்றிகளையும், எண்ணற்ற ஏற்ற இறக்கங்களையும் கொண்ட நீண்ட போராட்டம் ஆகும். காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்கள் உறுதிப்பாட்டுடன் ஒன்றுபட்டு நின்றனர்.

ஒரு இறையாண்மைமிகு சமத்துவ மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசை நிர்மாணித்திட வேண்டும் என்ற அபிலாஷை இந்திய மக்களிடையே நிலவியது. மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு குடிமக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் (**Fundamental Rights**), அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் (**Directive Principles of State Policy**), உள்ளிட்ட அம்சங்கள் மூலமாக இந்திய மக்களின் அபிலாஷைக்கு ஒரு தீர்மானகரமான வடிவத்தை வழங்க நமது அரசியலமைப்புச் சட்டம் முயன்றது.

பல்வேறு மொழிகள், பண்பாடுகள், பிரதேசங்கள், பருவநிலை மற்றும் அரசியல் பாதைகள் நிறைந்த, ஒரு துணைக் கண்டத்திற்கான ஸ்தூலமான பன்மைத்துவ அம் சங்கள் நிறைந்த, கூட்டாட்சி அமைப்புமுறை கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் வலியுறுத்தப்பட்டுள்ள இலட்சியங்கள் அரசாங்க நிர்வாகமுறையின் அனைத்து மட்டங்களிலும் எதிரொலிக்க வேண்டியது அவசியமாக இருந்தது; தற்போதைய அவசியமாகவும் இருக்கிறது.

கூட்டாட்சி முறை என்னும் கருத்து மற்றும் உணர்வை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இதர ஏற்பாடுகள் அனைத்திலும் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சமத்துவம் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வகைப்பட்ட கூட்டாட்சி முறையானாலும், அது எழுத்து வடிவம் பெற்ற ஒரு அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அதன் வல்லமை மீதே நிலைபெறும். நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் பல்வேறு மாநில மக்களின் பலதரப்பட்ட தேவைகளைக் கவனத்திற் கொண்டுதான் அரசாங்கத்தின் பல்வேறு நிலைகளில் சமச்சீரான அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளையும் அவர்களே செய்துள்ளனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் உள்ள பட்டியல் முறை இந்த அதிகாரப் பகிர்வுக்கான ஒரு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது. ஒன்றிய, மாநில மற்றும் பொதுப் பட்டியல் என்ற இந்தப் பட்டியல் முறை அதிகாரத்தையொட்டி எழும் மோதல் போக்கை இல்லாமல் செய்வதோடு ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்கள் அவற்றின் அதிகார வரையறைக்கு உட்பட்டு முடிவுகளை மேற்கொள்ள வகை செய்கிறது. மேலும், முடிவுகள் மேற்கொள்வதில் வெகுமக்கள் பங்கேற்பை அதிகரிக்கவும், சமுதாயத்தின் கடைக்கோடி மட்டத்திலும் ஜனநாயகத்தை வலுப்படுத்தவதற்காகவும் பஞ்சாயத்து மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகள் சேர்க்கப்பட்டன. இதற்கென 73 மற்றும் 74வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சரத்து 246 மற்றும் 243–ஜி அதிகாரப் பிரிவுக்கு வகை செய்கின்றன. ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்கள் இடையேயான நிதிப் பகிர்வு தொடர்பாகத் தெளிவாக வரையறை செய்தி, சரத்து 280 நிதி ஆணையத்தை உண்டாக்க வகை செய்கிறது. கூட்டுறவு மற்றும் கூட்டாட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கென இந்த அமைப்புகள் மற்றும் மாநிலங்களவை தவிர, கலந்தாலோசனைகள் மற்றும் விவாதங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னோடிகள் உருவாக்கியுள்ளார்கள்.

ஒன்றிய, மாநில அரசாங்கங்களுக்கு இடையே சுமூகமான முறையில் வேலைகள் நடைபெறவும், அவற்றுக்கு இடையே எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் மாநிலங்களுக்கு இடையேயான குழுவை அமைத்திட சரத்து 263 வகை செய்கிறது. இந்தக் குழு, சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் 1990 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆணையின்படி அமைக்கப்பெற்றது.

நமது அரசியல் அமைப்பில், கூட்டாட்சி தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்கான ஒரு தளமாகத் திட்டக்குழு இருந்து வந்தது. பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிக்கானத் தேவைகள் குறித்து திட்டக்குழு மிகவும் கவனத்துடன் இருந்தது. ஒன்றிய, மாநில மற்றும் ஒன்றிய பிரதேச அரசாங்கங்கள் இடையே கலந்தாலோசனை செய்வதற்கான ஒரு ஊர்தியாக மாநிலங்களுக்கு இடையேயான குழு, தேசிய மேம்பாட்டு குழு உள்ளிட்ட பல அமைப்புகள் செயல்பட்டு வந்துள்ளன. ஒன்றிய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான கூட்டுறவு உணர்வைப் பராமரிக்கும் வண்ணம், கலந்தாலோசனைகள் ஊடாக ஜனநாயக முறையில் எண்ணற்ற பிரச்சனைகளைச் சமாளிப்பதில் இந்த அமைப்புகள் முக்கிய பங்காற்றியுள்ளன.

கேசவானந்த் பாரதி வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், கூட்டாட்சி முறையானது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு அடிப்படையான அம்சம் என்று அங்கீகரித்தது. ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்பட, கூட்டாட்சி முறையின் சாரத்தை மேலும் உயர்த்திப் பிடித்திட சர்க்காரியா மற்றும் பூஞ்ச் கமிஷன் பல வழிமுறைகளைப் பரிந்துரைத்துள்ளன.

அரசின் பல்வேறு அங்கங்களுக்கு இடையே சமச்சீரான அதிகாரப் பகிர்வை வகுத்தளிக்கும் விதிமுறைகளை உறுதிப்படுத்துவதில் மேற்சொன்ன அமைப்புகளும், நடைமுறைகளும் வரலாற்று ரீதியிலான முக்கிய பங்காற்றியுள்ளன. அவ்வாறு உருவமைக்கப்பட்ட விதிமுறைகள் மிகவும் எளிமையானவை:

அதிகாரவரம்புகளுக்கு மதிப்பளித்து செயல்படுவது, கருத்தொற்றுமை ஊடாக ஆட்சி நடத்துவது, பன்மைத்துவத்தை உரிய முறையில் உணர்ந்து பரஸ்பரம் மதித்துப் போற்றுவது.


அகில இந்தியப் பணிகள், ஆளுநர் பதவி, குடியரசுத் தலைவர் ஆட்சி, அவசரகால நெருக்கடி உள்ளிட்ட பல அம்சங்களை முன்னிறுத்தி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சிக்கு எதிரான ஒற்றையாட்சியை நோக்கி இருப்பதாகச் சில அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நமது அரசியல் நிர்ணய சபையானது சட்டத்துறை நிபுணர்கள், ஜனநாயகத்தின் உயரிய இலட்சியங்களால் உந்தப்பட்ட ஆளுமைகளால் நிறைந்திருந்தது.

ஆனால், அவர்கள் வரலாற்று வெற்றிடத்தில் இருந்து இயங்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும். வெகுமக்கள் மத்தியில் ஜனநாயக நடைமுறை குறித்த மிகக் குறைந்த அனுபவத்தை மட்டுமே கொண்ட ஒரு புதிய சுதந்திர நாடாக இந்திய இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்ட ரீதியிலான நெறிமுறைகளைச் செழுமைப்படுத்த வேண்டியதை அழுத்தமாக வலியுறுத்தும் வண்ணம், டாக்டர் அம்பேத்கர் சூழலைச் சுருக்கமாக எடுத்

## ‘இட ஒதுக்கீடு என்பது தகுதிக்கு எதிரானது அல்ல’

இடஒதுக்கீடு என்பது, தகுதி என்பதற்கு எதிரானதல்ல என்றும் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவது மட்டுமே தகுதி அல்ல என்றும், இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் கூறியிருப்பது, இட ஒதுக்கீடு, தகுதி தொடர்பான வரையறைக ளில் தெளிவான விளக்கம் அளிப்பதாக அமைந்திருக்கிறது.



இளநிலை மருத்துவம் மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய தொகுப்பிற்காக ஒன்றிய அரசிற்கு மாநில அரசுகள் ஒதுக்கும் இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என கடந்த 7.1.2022 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்நிலையில் 20.1.2022 அன்று உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் இடஒதுக்கீடு ஏன் அவசியம் அளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான காரணங்களை தனது விரிவான தீர்ப்பில் மிகவும் நுட்பமான முறை யில் விவரித்துள்ளது.

நீதிபதிகள் டி.ஒய்.சந்திரசூட், ஏ.எஸ்.கோபண்ணா ஆகியோர் அளித்துள்ள இத்தீர்ப்பில், “சம வாய்ப்பே சமூக நீதி என்பது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போதே விவாதித்து முடிவெடுக்கப்பட்டுள்ளது. முற்பட்ட வகுப்பினருடன் போட்டி யிடுவதற்கு சமுதாயத்தில் பின்தங்கியோருக்கு இருக்கும் தடைகளை நீக்கி உண்மையான சமத்துவத்தை அளிப்பதே இடஒதுக்கீட்டு கொள்கை ஆகும். தகுதியின் அடிப்படையில் எனக் கூறி ஒதுக்கி வைக்கும் அளவுகோல் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகிறது; அது பாதிக்கப்படுவோரின் கண்ணியத்தை குறைக்கிறது.

அரசியல் சட்டம் சம வாய்ப்புக்கு மதிப்பளிக்கிறது. தனி மனிதரின் மதிப்பையும், கண்ணியத்தையும் அங்கீகரிக்கி றது. தகுதி என்பதை குறுகிய வட்டத்திற்குள் வரையறுப்பது சம வாய்ப்பு வழங்குவதற்கு அணை போடுகிறது. இடஒதுக்கீடு என்பது தகு திக்கு எதிரானது அல்ல” என்று விவரித்துள்ள னர். “வளமான குடும்பச் சூழல் காரணமாக உள்ள சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார பின்னணி மூலம் ஒரு சாராருக்கு கிடைக்கும் பயன்களை நுழைவுத் தேர்வுகள் பிரதிபலிப்பது இல்லை. தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவது மட்டுமே தகுதி அல்ல.

பொது நுழைவுத் தேர்வில் பெறுகிற மதிப்பெண்கள் அடிப்படையில்தான் தகுதி ஏற்படுகிறது என்று குறுகிய வரைய றைக்குள் பார்ப்பது பொருத்தமானது அல்ல.

இப்படி ஏற்படும் தகுதியானது வெறுமனே வழக்கமான முறையிலான சம வாய்ப்பை மட்டுமே அளிக்கிறது;

தகுதி என்பது இத்தகைய ஒரு போட்டித் தேர்வின் மதிப்பெண்கள் மூலம் மட்டுமே அளவிடப்படக்கூடாது. இந்த அடிப்படையில் “தகுதி” என்று நாம் வரையறை செய்வது குறிப்பிட்ட தரப்புக ளைச் சேர்ந்த தனிநபர்களுக்கு அவர்களது குடும்ப ரீதியான வாய்ப்புகள், அவர்கள் சார்ந்த சமுதாயத்தின் அடிப்படையிலான தொடர்புகள் மற்றும் தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்ற அத்தகைய வாய்ப்புகளின் மூலம் அமையப் பெற்ற பணித்திறன்கள் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து மொத்தமாக கிடைக்கப் பெற்ற தகுதி என்பதுதான்; இதை வெற்றிக்கானதாக அங்கீகரிப்பது சமூக ஏற்றத்தாழ்வுகளை உறுதி செய்வதும், மறு உற்பத்தி செய்வதுமாக ஆகிவிடும்” என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

இடஒதுக்கீடு தொடர்பாக இன்னும் விரிவாக உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள இந்த தீர்ப்புரை, அரசியல் அரங்கில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

**பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கும் வர்க்கம் அல்ல. பொருளாதார வாழ்வியல் நெருக்கடி பாட்டாளி வர்க்கத்தை உந்தித் தள்ளுகிறது. இறுதி விடுலைக்கு போராடும்படி நிர்பந்திக்கிறது.**

**– ஏங்கல்ஸ்**

# ந்தளங்கள் தகர்க்கப்படுகின்றன




# சி முறையைப் ப்போம்

துரைத்தார்: ‘‘இந்தியாவில் ஜனநாயகம் என்பது, அடிப்படையில் ஜனநாயக விரோதமான தன்மை கொண்ட இந்திய நாட்டின் மீதான ஒரு மேல் பூச்சு மட்டும் தான்.’’ மேலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் மற்றும் பனிப்போர் தொடங்கிய காலகட்டத்தின் போது இந்தியா அதன் சுதந்திரத்தை அடைந்தது.

மேற்கத்திய ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் மற்றும் பிராந்திய அளவில் எதிர்நிலையில் செயல்படும் சக்திகள், அவற்றின் பகையுணர்வு ஆகியவை இந்திய ஜனநாயக வளர்ச்சிப் போக்கைச் சீர்குலைத்திடும் அச்சுறுத்தல்களாகத் தொடர்ந்தன. எனவே, நமது அரசியல் அமைப்புச் சட்ட முன்னோடிகள், நீண்ட விவாதங்கள் மற்றும் எச்சரிக்கைகளுக்குப் பிறகு, அவசரகால அம்சங்கள் ஒருபோதும் பயன்படுத்தப்படாது என்ற உறுதியான எதிர்பார்ப்புடன்தான், அந்த அம்சங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்தனர்.

அவசரகால நிலை அம்சங்கள் குறித்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் 352 முதல் 360 வரையிலான சரத்துகள் மீதான அரசியல் நிர்ணய சபை விவாதத்தின் போது, ஜனநாயகத்தின் மீது பற்றுறுதி கொண்ட பல உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதில் அளித்துப் பேசிய டாக்டர் அம்பேத்கர், ‘‘அந்தச் சரத்துகள் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாது என்ற உணர்வையே நானும் பகிர்ந்து கொள்கிறேன். ஒரு கூட்டமைப்பு முறையாக இயங்கும் வண்ணம் தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கட்டமைக்கப்பட்டு இருக்கிறது’’ என்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் தன்மையைப் பறைசாற்றுகிறார்.

நமது அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சிமுறை கொண்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டம் என்று டாக்டர் அம்பேதகர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். துரதிர்ஷ்டவசமாக, நமது காலத்தில் அவ்வாறு இல்லை என்பதோடு, கூட்டாட்சி முறை மற்றும் அமைப்புகளின் மீது மோசமான தாக்குதல்கள் நடத்தப்படுவதை இன்று நாம் பார்த்து வருகிறோம்.

மோடி அரசாங்கத்தின் தொடக்ககால நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக திட்டக்குழு கலைக்கப்பட்டது. கடந்த ஏழு ஆண்டுகளில், மோடி தலைமையில் ஒருமுறை மட்டுமே மாநிலங்களுக்கு இடையேயான குழு கூடியது. அவரது ஆட்சிக் காலத்தில் தேசிய மேம்பாட்டுக் குழு இதுவரையில் கூட்டப் படவில்லை. 15வது நிதி ஆணையத்தின் பதவிக் காலம் சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது.

பல மாநிலங்கள் நிதிப் பகிர்வு குறித்து கவலை தெரிவித்துள்ளன. ஜிஎஸ்டி மூலமாக மாநிலங்களின் நிதி ஆதாரம் மற்றும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு, தேசத்தின் மறைமுக வரிவிதிப்பு முறை ஒற்றைத்தன்மை கொண்டதாக சீர்குலைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் கலந்து ஆலோசிக்காமல் அரசியல் ரீதியிலான பல முக்கியமான முடிவுகளை மோடி அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. சரத்து 370, அம்மாநில சட்டமன்றத்துடன் ஆலோசிக்கப்படாமல் திடீரென்று நீக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியலில் 14வது இடத்தில் ‘விவசாயம்‘ குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மத்திய அரசாங்கம் அதன் அதிகார வரம்பை மிகத் தெளிவாக மீறி, சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்களை இயற்றி, அவற்றை மாநிலங்கள் மீது திணித்தது.

அது போலவே, மாதிரி ஏ.பி.எம்.சி (**APMC Act**) சட்டமும் மாநிலங்கள் மீது திணிக்கப்பட்டது. பாரபட்சமான நீட் தேர்வு முறையால் தமிழ் நாட்டில் மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். மத்திய அரசுத் தேர்வுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள, பல்வேறு பாடத்திட்டத்தில் பயின்ற, பிற மொழி பேசும் மக்களுக்கு சாதகமாக இருப்பதில்லை. புதிய கல்விக் கொள் கையும் நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி முறையில் ஆக்கிரமிப்பு செய்வதாக உள்ளது.

அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமல் அந்த மாநிலங்களில் எல்லைப் பாதுகாப்பு படையின் அதிகார வரம்பு விரிவுபடுத்தப்பட்டது.

ஆளுநர்கள், துணைநிலை ஆளுநர்கள், மாநில சட்டமன்றங்கள் மற்றும் நிர்வாகத்துறைகளின் அதிகாரத்தில் தலையிடுவதால் அண்மைக்காலங்களில் அத்தகைய அரசியலமைப்புச் சட்டப் பொறுப்புகள் கூட பலமுறை கண்காணிப்புக்கு உள்ளாயின. மேலும் சில மாநில ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டப் படியான முதன்மைத் தலைவர்களாகத் தங்கள் பணிகளை மேற்கொள்ளாமல், ஒன்றிய அரசாங்கத்தின் நீள்கரங்களாக இருந்து வருகிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளார்கள்.

பா.ஜ.க.–ஆர்.எஸ்.எஸ் ஒன்றிய அரசாங்கத்திற்கு இணக்கமான புதிய அரசாங்கங்களை நிறுவிட, ஆளுநர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது செல்வாக்கு செலுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைச் சீர்குலைகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. அண்மையில், கேரளம், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் குடியரசு தின விழா அணிவகுப்பில் இடம்பெறுவதை ஒன்றிய அரசு மறுத்துவிட்டதை எதிர்த்து சம்பந்தப்பட்ட மாநிலங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நமது தேசத்தின் பன்மைத்துவத்திற்கும், அரசியலமைப்புச் சட்ட விழுமியங்களுக்கும் கிஞ்சித்தும் மதிப்பளிக்காது அவமதிக்கும் ஒரு சித்தாந்தத்தில் இருந்துதான் இத்தகைய நிகழ்வுப் போக்குகள் தோன்றுகின்றன. இத்தகைய போக்குகள் அனைத்தும் நமது நாட்டை ஒற்றைத்தன்மை கருத்தியலுக்குள் பொருத்திப் பார்க்கும் சிந்தனைப் போக்கில் வேரூன்றி உள்ளன. அத்தகைய கருத்தியல்தான் ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.கவின் முத்திரை ஆகும்.

இந்தி, இந்து, இந்துஸ்தான் என்ற கருத்தும், ஒற்றைத் தன்மை மீது அவர்கள் கொண்டுள்ள நாட்டமும், நமது தேசத்தின் பன்மைத்துவம் வழங்கி வரும் நற்பலன்களைக் கண்டுணர முடியாத குருடர்களாக அவர்களை தடம் புரளச் செய்துவிட்டது. அதற்கு மாறாக, ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு நுட்பமான பரிமாணத்தையும் கட்டுப்படுத்தும் வகையில், வாழ்க்கை இணையர் முதல் ஆடைகளைத் தேர்ந்தெடுப்பது வரை, மதம், மொழி, சாதி மற்றும் பாலினம் என்று அனைத்து தளங்களிலும் தங்களின் குறுகிய சிந்தனையைத் திணிக்கவே முயலுகிறார்கள்.

பன்மைத்துவத்தைப் பாழாக்கும் இந்தச் சித்தாந்தம் நமது குடியரசு, சமுதாயம் மற்றும் வாழ்க்கை முறைகள் மீது அபாயகரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

**‘ஒரு நாடு, ஒரு வரி’ என்று தொடங்கிய ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.கவின் போர் முழக்கம் தற்போது ‘ஒரு நாடு, ஒரு தேர்தல்’ என்றாகிவிட்டது. ஒற்றைத்தன்மையின் மீது அவர்கள் கொண்டுள்ள நாட்டத்தைப் பார்க்கும் போது, அந்த முழக்கம் எந்நேரத்திலும் ‘ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு மதம்‘ என்ற அபாயக் கட்டத்தை அடையக்கூடும். இந்தப் போக்கு, முற்போக்கு இலட்சியங்களான மதச்சார்பின்மை, சகிப்புத் தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை கிள்ளி எறிந்து விடும்; நமது தேசத்தை மீண்டும் ஜனநாயகத்துக்கு எதிரானதாக மாற்றிவிடும்.**


அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 1, ‘‘இந்தியா, அதாவது பாரத், மாநிலங்களின் ஒன்றியம் ஆகும்.’’ என்று பிரகடனப்படுத்துகிறது. இந்தப் பின்னணியில், மாநிலங்கள் உள்ளிட்ட அனைத்து அங்கங்களுக்கும் அதிகாரப் பகிர்வு என்பது அவசியமாகிறது.

நமது அரசியலமைப்பின் கூட்டாட்சி முறையை உணர்வுப் போதத்துடன் அங்கீகரித்து, ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க கனவு காணும் ஒற்றைப்பரிமாண அதிகாரப் பாய்ச்சலுக்கு எதிராகப் போராடுவது தான் நமது தேசத்தின் பண்பு, அதன் அனைத்து அங்கங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதங்களைப் பாதுகாத்திட அவசியமாகும்.

ஒன்றிய அரசின் ஆக்கிரமிப்புத் தன்மைக்கு எதிராக அனைத்து மட்டங்களிலும் ஒரு போராட்டம் நடைபெற வேண்டும். வகுப்புவாதபாசிச சக்திகளை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றுவதாக நமது போராட்டம் அமைந்திட வேண்டும்.

அரசாங்கத்தை மக்களுடைய, மக்களுக்கான மற்றும் மக்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கமாக உருவாக்கிட நாம் பாடுபட வேண்டும். நமது குடியரசை மீட்பதற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துமாறு சமகால வரலாறு குடிமக்களை அறைகூவி அழைக்கிறது.

தமிழில்: **அருண் அசோகன்**



# கர்நாடக முதலமைச்சரின் அத்துமீறல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கிடைக்கும் நிலத்தடி நீரில் புளோரைடு அளவுக்கு மீறிய அடர்த்தியாக இருப்பது கண்டறியப்பட்டது. பல் உதிர்தல், எலும்புகள் பலவீனமாதல், சிறுநீரகப் பாதிப்புகள் என பல பாதிப்புகளுக்கு ஆளாகி வந்த மக்கள் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் உருவாக்க சுமார் 40 ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.


மக்கள் நல்வாழ்விலும் சுகாதாரத்திலும் அக்கறை காட்டிய, இன்றைய முதலமைச்சர், துணை முதல்வராக உள்ளாட்சி துறை நிர்வாகத்தில் இருந்த போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2008 பிப்ரவரி 26 ஆம் தேதி, அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். ஜப்பான் நாட்டு கூட்டுறவு வங்கி உதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் என்பதும் முற்றிலும் தமிழ்நாடு எல்லைக்குள் அமைத்திருப்பது, பில்லிகுண்டுலுக்கு கீழ் பகுதியில் தமிழ்நாட்டிற்கு சட்டப்பூர்வ உரிமையுள்ள தண்ணீரை ஆதாரமாக் கொண்டது.

இதில் கர்நாடக அரசு கருத்துச் சொல்வதற்கு எந்தவித உரிமையும் இல்லை. மேகதாது அணை கட்டும் பிரச்சினையை திசைதிருப்ப கர்நாடக முதலமைச்சர், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை எதிர்ப்பது அதிகார அத்துமீறலாகும். தமிழ்நாட்டு மக்களின் ஆத்திரத்தை தூண்டும் மலிவான செயலாகும். கர்நாடக முதலமைச்சரின் வரம்பு மீறிய செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

குறிப்பிட்ட கால வரம்பில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



**உழைக்கும் வாழ்க்கைக்கும் வாழ்கின்ற வாழ்க்கைக்கும் இடையே உள்ள பரிதாபமான துன்பநிலை என்பது உழைக்கும் வர்க்கம் தனது உழைப்பு முழுவதையும் கூலிக்காக இழந்து விடுவது என்பதுதான்.**

**- மார்க்ஸ்**



# டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஊர்தி புறக்கணிப்பு

## தமிழ்நாடு முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

ஜனவரி 26 குடியரசு தினவிழாவில் தமிழக விடுதலை போராட்ட வீரர்களான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., அந்நியரை எதிர்த்துப் போராடிய வீரமங்கை வேலு நாச்சியார், மகாகவி சுப்பிரமணிய பாரதி ஆகியோர் உருவப்படங்கள் அடங்கிய அலங்கார அணிவகுப்பு வாகனங்களுக்கு அனுமதி மறுத்த ஒன்றிய அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திண்டுக்கல்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திண்டுக்கல் மாவட்ட குழு சார்பில் மாவட்ட பொருளாளர் கே.ராஜாங்கம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.ஜெயமணி சு.பாலுபாரதி மாவட்ட குழு உறுப்பினர் பிச்சைமணி கலந்து கொண்டனர்.

**தேன்கனிக்கோட்டை:** தளி சட்டமன்றத் தொகுதி தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தளி சட்டமன்ற உறுப்பினர் டி. இராமச்சந்திரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

அஞ்செட்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துனை செயளாலர் டி.சின்னச்சாமி, மாவட்ட கவுன்சிலரும், மாவட்ட விவசாய சங்க செயலாளருமான பி.பழனி, வட்ட செயலாளர் முனிராஜ், மாதேவன் உள்ளிட்டோர் பங்கேற்று கண்ட உரை நிகழ்த்தினர்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் சிவராஜ் தலைமை தாங்கினார். நகர செயலாளர் பி.உபேத்கி, இளைஞர் பெருமன்ற வாஜித் பாட்ஷா, முஜீப் அஸ்லாம், பயாஸ், முனியன், ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தருமபுரி தொலைபேசி நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு நல்லம்பள்ளி வட்டார செயலாளர் எல்.ஆர்.கிருஷ்ணராஜ் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் கண்டன உரையாற்றினார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.மணி,மாவட்டக்குழு உறுப்பினர்கள் பாரதி,பொன்மாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினார்.

**பென்னாகரம்:** பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் முன்பு நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் விஜயபாரதி தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி. மாதையன் கண்டன உரையாற்றினார். இதில் வட்டார செயலாளர் பி. முனியப்பன், துணை செயலாளர் பி.சம்பத், நகர துணை செயலாளர் இல. தர்மராஜா, மாவட்ட குழு உறுப்பினர் கவுன்சிலர் நாகராஜ் உள்ளிட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

**தஞ்சை:** தஞ்சை ஸ்மார்ட் சிட்டி பழைய பேருந்து நிலையம் முன்பு தஞ்சை மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, தஞ்சை மாவட்ட செயலாளர் சின்னை பாண்டியன், மாநகரச் செயலாளர் வடிவேலன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணை செயலாளர் காசிநாதன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சி.பக்கிரிசாமி, சி.சந்திரகுமார், வீரமோகன், கோ.சக்திவேல், திமுக தஞ்சை மாநகர துணை செயலாளர் ஆர்.கே.நீலகண்டன், ஆகி யோர் கண்டன உரையாற்றினர். சிபிஐ மாநகர செயலாளர் ஆர்.பி.முத்து குமரன் நன்றி கூறினார்.

**ஈரோடு:** ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, பவானி, சத்தியமங்கலம், கோபி, அந்தியூர் உள்ளிட்ட இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஈரோட்டில் சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் திருநாவுக்கரசு தலைமை வகித்தார். ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி, தி.மு.க மாநகர செயலாளர் சுப்பரமணியம் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் ரவி, சிபிஎம் மாவட்டச் செயலாளர் ரகுராமன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**கரூர்:** கரூரில் பஸ்நிலையம் அருகில் ஆர்.எம்.எஸ்.தபால் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம் தலைமை தாங்கினார். இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் எம்.லட்சுமி காந்தன், வி.தொ.ச.மாவட்ட செயலாளர் ஆர்.தங்கவேல், நகர செயலாளர்கள் கே.எஸ்.நேதாஜி, பி.சக்திவேல், மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

**வையம்பட்டி:** மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியம் ந. பூலாம்பட்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய துணை செயலாளர் ஸ்டீபன் சேகர் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் கண்டன உரை நிகழ்த்தினார். மேலும் நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

**வேலூர்:** வேலூர் தபால் தலைமை அலுவலகம் முன்பு வேலூர் மாநகர செயலாளர் ஏ.ஏழுமலை தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது. குடியாத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா, குடியாத்தம் ஒன்றிய செயலாளர் துரைசெல்வம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**திருப்பத்தூர்:** திருப்பத்தூரில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் எம். சுந்தரேசன் தலைமை தாங்கினார். வேலூர் மாவட்ட செயலாளர் ஏ .சி.சாமிக்கண்ணு துவக்கி வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர்.தேவதாஸ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர்.முல்லை, ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் கே.ஆர்.வேணுகோபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**ஈரோடு வடக்கு:** ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பவானியில் நகர செயலாளர் வழக்கறிஞர் ப.மா.பாலமுருகன் தலைமையிலும், அந்தியூரில் வட்டச் செயலாளர் வழக்கறிஞர் கிருஷ்ணகுமார் தலைமையிலும், கோபியில் ஒன்றிய செயலாளர் கனகராஜ் தலைமையிடம், சத்தியமங்கலத்தில் நகரச் செயலாளர் ஸ்டாலின் சிவகுமார் தலைமையிலும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன், வடக்கு மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன், மாவட்ட பொருளாளர் பி.என். ராஜேந்திரன், மாநில குழு உறுப்பினர் எஸ்.மோகன் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ப.பா.மோகன், கந்தசாமி, அகுபரமேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர். நிறைவாக ஒன்றி அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.






















**கும்மிடிப்பூண்டி:** கும்மிடிப்பூண்டியில் மாவட்ட துணை செயலாளர் ஜெ.அருள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**பெரியகுளம்:** பெரியகுளம் தாலுகாக்குழு சார்பில் அண்ணா சிலை அருகில் தாலுகா செயலாளர் இ.பி.காசிவிஸ்வநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் வே.பெத்தாட்சி ஆசாத், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள், பாண்டித்துரை, சிபிஐ ஞானவேல், க.ரமேஷ் உள்ளிட்ட தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**சின்னமனூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சின்னமனூர் ஒன்றியக்குழு சார்பில் மார்க்கையன்கோட்டை ரவுண்டானா அருகில் ஒன்றியச் செயலாளர் இரா.கதிரப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் சு.சரவண புதியவன், இளைஞர் பெருமன்ற நகரச் செயலாளர் இர.மகேந்திரன், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் செ.ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் மு.அரிஹரன் மற்றும் கட்சி தோழர்கள் திரளாக கலந்து கொண்டு மத்திய அரசிற்கு எதிராக முழக்கமிட்டனர்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றிய செயலாளர் பிச்சைமணி தலைமை வகித்தார். நகர செயலாளர் முனீஸ்வரன், திக சார்பில் செல்வி கண்ணன் காங்கிரஸ் சார்பில் வேல்மணி ஆகியோர் கண்டன உரையாற்றினர். முடித்து வைத்து மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் உரையாற்றினார். ஜனசக்தி ஒன்றிய பொறுப்பாளர் ஜனசக்தி பிரபாகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**புத்தநத்தாம்:** மணப்பாறை ஒன்றியம் புத்தநத்தாம் கடை விதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டித்து தெருமுனை கூட்டம் நடைபெற்றது. மன்சூர் ராஜா தலைமை வகித்தார். சிராஜ்தீன் முகமது பாரூக் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், துணைச் செயலாளர் பழனிச்சாமி, வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம், நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மணப்பாறை ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**தென்காசி மாவட்டம்**

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் ஒன்றிய செயலாளர் ப.வேலு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா ஆகியோர் கண்டன உரை ஆற்றினர்.

வாசுதேவநல்லூரில் நகர செயலாளர் ராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ப.வேலு, துணைச் செயலாளர் முருகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

டி.ராமநாதபுரத்தில் நகரச் செயலாளர் ஜெ.ஜெயகணேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர் ப.வேலு, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்பையா, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி மாதர்சங்க மாவட்ட செயலாளர் கந்தம்மாள் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

இராயகிரியில் நகரச் செயலாளர் சமுத்திரம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மேலும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

குருவிகுளத்தில் மாவட்ட குழு உறுப்பினர் கணேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாலுகா செயலாளர் அந்தோணிராஜ் கண்டன உரையாற்றினார்.

ஆழ்வார்குறிச்சியில் ஒன்றிய செயலாளர் எஸ்.வேலாயுதம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவம், சிவசுப்பிரமணியன், சமுத்திரம், பச்சையப்பன், முத்துசாமி ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

பாவூர்சத்திரத்தில் வி.கே.புதூர் தாலுகா செயலாளர் ஐயப்பன் தலைமையில் நடைபெற்றது. தென்காசி தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பரமசிவம் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

சங்கரன்கோவிலில் ஒன்றிய செயலாளர் குருசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட குழு உறுப்பினர்கள் மானுவேல்ராஜன் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

தென்காசியில் நகரச் செயலாளர் கணேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை அனைத்து இந்திய பார்வர்ட் பிளாக் மாவட்ட தலைவர் தங்கபாண்டியன், கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

**சேலம்:** சேலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட செயலாளர் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளானோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

**மேலூர்** : மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா குழுவின் சார்பில் தாலுகா செயலாளர் க.மெய்யர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் சி.பெரியவர், ந.திலகர் மற்றும் நகர தாலுகா குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மீரா தியேட்டர் அருகில் தாலுகா செயலாளர் வி.சரவணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், எல்.லோகநாதன், ஆர்.ராபின் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**சோழவரம்:** திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் காந்தி நகரில் கிளைச் செயலாளர் கே.குமரேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், கே.போஸ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் தொகுதிக்குழு சார்பில் காந்தி சாலையில் கமலநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆ.மூர்த்தி, த.சுந்தரமூர்த்தி, பி.ஸ்டாலின், சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள்




## நெல்லை மாவட்ட கிளை மாநாடுகள்

**அம்பாசமுத்திரம் ஒன்றியம்:** அம்பாசமுத்திரம் கிளை: செயலாளர் வடிவேலு, துணைச் செயலாளர் சிவகுமார், விக்கிரமசிங்கபுரம் செயலாளர் கண்ணன், துணைச் செயலாளர் இசக்கி ராஜ், சிவந்திபுரம் செயலாளர் நமச்சிவாயம், துணைச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், மன்னார்கோவில் செயலாளர் எம்.எஸ்.மணி, வெயிலான் தெரு செயலாளர் சங்கரநாராயணன், துணைச் செயலாளர் சுப்பையா, காக்கநல்லூர் செயலாளர் எஸ்.பேச்சி, துணைச் செயலாளர் சொக்கலிங்கம், பத்தமடை செயலாளர் என்.பி.ஷேக், துணைச் செயலாளர் சுந்தரம், வீரவநல்லூர் செயலாளர் தாமஸ், துணைச் செயலாளர் ராஜன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாடுகளில் மாவட்டச் செயலாளர் எஸ். காசிவிஸ்வநாதன், ஒன்றிய செயலாளர் ஏ. ராமகிருஷ்ணன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் முருகன் மற்றும் கண்ணன் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**களக்காடு ஒன்றியம்:** களக்காடு ஒன்றியம், கீழ வடகரையில் கிளை மாநாட்டில் இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட செயலாளர் பி.சபியா கட்சிக் கொடியை ஏற்றிவைத்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன் அரசியல் நிலை குறித்து ரிப்போர்ட் செய்தார். கிளைச் செயலாளராக ஹோசிமின், துணைச் செயலாளராக ராமசுப்பு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கே.முத்துகிருஷ்ணன், பி.பெரும்படையார், கே. முருகன், அயூப்கான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**ராதாபுரம் தாலுகா:** வள்ளியூர் கீழ் பகுதி செயலாளர் ஆறுமுகம், துணைச் செயலாளர், ஏ.அய்யா முருகன், வள்ளியூர் தென் பகுதி செயலாளர் கே.சந்தானமுத்து, துணைச் செயலாளர் பி.முத்தையா, பணகுடி செயலாளர் என்.பன்னீர்செல்வம், துணைச் செயலாளர் எம்.மிக்கேல் அந்தோணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கிளை மாநாடுகளில் தாலுகா செயலாளர் ஏ.சேது ராமலிங்கம், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் கே. முத்துகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நெல்லை மண்டலம்:** பேட்டை செக்கடி கிளை செயலாளர் முருகன், துணை செயலாளர் எஸ்.ஆறுமுகம், இண்டஸ்ட்ரியல் கிளை செயலாளர் தமிழரசன் துணைச் செயலாளர் பால் முகமது, நெல்லை டவுன் 44 வது வார்டு செயலாளர் பி.கிருஷ்ணன், துணைச் செயலாளர் த.சரவணன், ரங்கநாதபுரம் கிளை செயலாளர் எம்.முருகன் துணைச் செயலாளர் எம்.பாலகிருஷ்ணன், பழையபேட்டை 50 வது வார்டு செயலாளர் என்.சங்கரவேல் துணைச் செயலாளர் என்.ராஜூ ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாடுகளில் மாவட்டச் செயலாளர் எஸ். காசிவிஸ்வநாதன், பொறுப்பாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன், கே.முத்துகிருஷ்ணன், கே.எஸ்.பாலு, பி.கிருஷ்ணன், ஏ.வெடிகண்ட பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தச்சநல்லூர் மண்டலம்:** மேலக்கரை கிளை மாநாட்டில் நெல்லை மண்டல பொறுப்பாளர் எம்.எஸ்.பாலகிருஷ்ணன் கட்சிக் கொடியை ஏற்றி கட்சிக் கார்டுகளை வழங்கினார். கிளைச் செயலாளராக ஜி.இசக்கியம்மாள், துணைச் செயலாளராக வள்ளியம்மாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பாளைமேலப்பாளையம் மண்டலம்:** மேலப்பாளையம் கிளை மாநாடு பீடித் தொழிலாளர் காலனியில் சரோஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன் அரசியல் அறிக்கை செய்தார். செயலாளராக எஸ்.எம்.ஷேக் மதார், துணைச் செயலாளராக சரோஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பாளையங்கோட்டை 1வது கிளை மாநாட்டில் ஆர்.ஆயிரத்தான், துணைச் செயலாளராக ஜி.சுரேஷ் பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பாளையங்கோட்டை ஒன்றியம் கிருபா நகர் கிளை மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை பீடித் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கே.எஸ்.பாலு ஏற்றிவைத்தார். பாளையங்கோட்டை ஒன்றிய பொறுப்பாளர் கே. முத்துகிருஷ்ணன் அரசியல் விளக்கவுரையாற்றினார். உறுப்பினர் கார்டுகளை வழங்கி எம்.எஸ். பாலகிருஷ்ணன் வாழ்த்திப் பேசினார். செயலாளராக எஸ். புதியமுத்து, துணைச் செயலாளராக எம்.பேராட்சி செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மானூர் ஒன்றியம்:** மேல நரிக்குடி கிளை செயலாளராக கே.செங்கையா, துணைச் செயலாளராக சின்ன குட்டி, வடக்கு அச்சம்பட்டி கிளை செயலாளராக ஜான் சுந்தர்ராஜ், துணைச் செயலாளராக மாணிக்கராஜ், கருப்பனூத்து கிளை செயலாளராக முருகன், துணைச் செயலாளராக எம்.மணிகண்டன், பாலாமடை கிளை செயலாளராக ஜி.செந்தில் முருகன் , துணைச் செயலாளராக ஏ.முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கிளை மாநாடுகளில் மாவட்டச் செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன், நெல்லை மண்டலப் பொறுப்பாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன், மானூர் ஒன்றியப் பொறுப்பாளர் கே.செங்கையா ஆகியோர் கலந்து கொண்டனர்.


**சஞ்சீவ முத்தப்ப நகர் கிளை:** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இண்டூர் வட்டாரம் எற்றபையனஅள்ளி ஊராட்சி சஞ்சீவ முத்தப்ப நகர மாநாடு சி.கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் பி.டி.அப்புனு ஆகியோர்அரசியல் நிலை குறித்து பேசினர். கூட்டத்தில் கிளை செயலாராக பசுபதி,துணை செயலாளராக காளியப்பன், பொருளாளராக ரங்கசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மாப்பிள்ளையூரணி கிளை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாப்பிள்ளையூரணி கே.வி.கே.சாமி நகர் கிளை மாநாடு அண்ணாத்துரை தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் மாநகர செயலாளர் எஸ்.பி.ஞானசேகர், உதவி செயலாளர் மாடசாமி, பொருளாளர் சுப்ரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**புத்தாநத்தம் ஊராட்சி :** மணப்பாறை ஒன்றியம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புத்தாநத்தம் ஊராட்சியில் உள்ள மூன்று கிளைகள் மாநாடு புத்தாநத்தம் திண்டுக்கல் சாலையில் உள்ள சிறப்பு சந்தை மைதானத்தில் நடைபெற்றது. மாநாட்டை துணைச் செயலாளர் பழனிச்சாமி மணப்பாறை ஒன்றிய துணைச் செயலாளர் ராஜேந்திரன் வழி நடத்தினர். கிழக்கு பகுதிக்கு செயலாளராக மன்சூர் ராஜா, துணை செயலாளராக சபி மைதீன், பொருளாளராக மைதீனும், வடக்குக் பகுதிக்கு செயலாளராக முகமது பாரூக், துணை செயலாளராக தவ்பிக், பொருளாளராக சமதும், மேற்கு பகுதி செயலாளராக சிராஜ்தீன், துணை செயலாளராக உதுமான், பொருளாளராக அமானுல்லா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் உரை நிகழ்தினார்.

**ஒண்டிப்புதூர் கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் கிளை மாநாடு எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மண்டலச் செயலாளர் மு.வ.கல்யாணசுந்தரம், மண்டலக்குழு பொருளாளர் சி.ஏ .வேலுசாமி, கிழக்கு மண்டலக்குழு உறுப்பினர் எஸ்.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். பி.சாந்தாமணி கொடியேற்றினார். கிளைச் செயலாளராக பி.குணசேகரன், துணைச் செயலாளராக டி.ராஜேந்திரன், பொருளாளராக ஏ.டி.மஞ்சுநாத் பாபு ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.




**பண்டஅள்ளி கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டாரம் பண்டஅள்ளி கிளை மாநாடு துணைச் செயலாளர் எஸ்.மாதையன் தலைமையில் நடைபெற்றது. இண்டூர் வட்டார பொருளாளர் எம்.மாதையன் கட்சி கொடியை ஏற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து பேசினர். இறுதியில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

## தென்காசி மாவட்டம்

**ராயகிரி இடைக்கமிட்டி:** இராயகிரி 4வது வார்டு கிளை செயலாளராக கண்ணன், துணைச் செயலாளராக மணிகண்டன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்கள். 7,8வது வார்டு கிளையின் செயலாளராக ப.இராமசாமி, துணைச் செயலாளராக ரகுராமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 13 வது வார்டு கிளை செயலாளராக செல்லம்மாள், துணைச் செயலாளராக திருமலை குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் 14வது வார்டு கிளை செயலாளராக சுடலை, துணைச் செயலாளராக பால்சாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் மாநாடுகளில் நகர செயலாளர் சமுத்திரம், துணைச்செயலாளர் சொரிமுத்து, மாதர் சங்க மாவட்ட செயலாளர் கந்தமாள் மாவட்ட குழு உறுப்பினர் சமுத்திரக்கனி ஆகியோர் பங்கேற்றனர்.

**வாசுதேவநல்லூர் ஒன்றியம்:** வாசுதேவநல்லூர் ஒன்றிய சரவணாபுரம் கிளை செயலாளராக எஸ்.பாலசுப்பிரமணியம், துணைச் செயலாளராக ஜெயராஜ் ஆகியோரும் டி.என்.புதுக்குடி கிளை செயலாளராக எஸ்.சீனிவாசன், துணைச் செயலாளராக என் முருகன் ஆகியோரும் சிந்தாமணி கிளை செயலாளராக பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளராக சுப்பிரமணியன் ஆகியோரும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மாநாடுகளில் ஒன்றிய செயலாளர் ப.வேலு, மாவட்ட பொருளாளர் டி.சுப்பையா, ஒன்றிய துணை செயலாளர் பி.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கடையம் ஒன்றியம்:** கடையம் ஒன்றிய ஆழ்வார்குறிச்சி கிளைச் செயலாளராக சிவசுப்பிரமணியன், துணைச் செயலாளராக குமார் ஆகியோரும், அழகப்பபுரம் கிளை செயலாளராக ஆர்.மோகன், துணைச் செயலாளராக எம்.செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாநாடுகளில் ஒன்றிய செயலாளர் வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவம், வி.கே.புதூர் ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டார்.

**செங்கோட்டை தாலுகா:** செங்கோட்டை தாலுகா வல்லம் கிளை செயலாளராக எஸ்.சுந்தர், துணைச் செயலாளராக முத்துக்குமார் ஆகியோரும், புளியரை கிளை செயலாளராக கருப்பையா, துணைச் செயலாளராக பண்டார நம்பியார் ஆகியோரும், சாம்பவர் வடகரை கிளை செயலாளராக அரசப்பன், துணைச் செயலாளராக சுடலைமுத்து ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாடுகளில் ஒன்றிய செயலாளர் மாரியப்பன், ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி, மாநில குழு உறுப்பினர் பி.எஸ்.போஸ், சாமி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சிவகிரி இடைக்கமிட்டி:** சிவகிரி இடைக்கமிட்டியில் 4வது வார்டு கிளைச் செயலாளராக குருவு, துணைச் செயலாளராக மதன் ஆகியோரும், 8வது வார்டு கிளை செயலாளராக வேல்முருகன், துணைச் செயலாளராக கணேசன் ஆகியோரும், ஒன்பதாவது வார்டு கிளை செயலாளராக ராஜகோபால், துணைச் செயலாளராக சின்னகண்ணு ஆகியோரும், 13,15 வது வார்டு கிளை செயலாளராக கணேசன், துணை செயலாளராக அர்சுணன் ஆகியோரும், 14வது வார்டு கிளை செயலாளராக கணேசன், துணைச் செயலாளராக ஐயப்பன் ஆகியோரும், 16வது வார்டு கிளை செயலாளராக அருணாசலம், துணைச் செயலாளராக குருவு ஆகியோரும், 18வது வார்டு கிளை செயலாளராக மாடசாமி, துணை செயலாளராக முனியாண்டி ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

நடைபெற்ற மாநாடுகளில் சிவகிரி நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட செயலாளர் இசக்கித்துரை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிங்காரவேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இலங்கை அரசின் ஏல அறிவிப்பு

# ஒன்றிய அரசு தலையிட்டு தடுக்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதும், அவர்களது படகுகள், மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உடைமைகளை பறிமுதல் செய்வதும் தொடர்கிறது. இலங்கை அரசின் மீனவர் விரோதக் கொள்கைகளை கண்டித்து தமிழ்நாட்டு மீனவர் கிராமங்கள் அனைத்தும் போராடி வருகின்றன. இது தொடர்பாக ஒன்றிய அரசு, இலங்கை அரசுக்கு வலிமையான குரலில் கண்டனம் தெரி வித்து, எதிர்காலத்தில் அமைதி நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு முழுமையும் ஒத்த கருத்துடன் வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில் தமிழ்நாட்டு மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் வரும் பிப்ரவரி 5ஆம் தேதி முதல் ஏலத்தில் விடப்படும் என இலங்கை அரசு அறிவித்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்கள் விடுதலை அடையும் போது, அல்லது அவர்கள் விடுவிக்கப்படும் போது, அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும், உடைமைகளையும் திருப்பி வழங்க இலங்கை கடற்படை முன்னதாக ஒப்புக் கொண்டதற்கு மாறாக இலங்கை அரசு நடந்து கொள்வது, மீனவர்கள் வாழ்வாதார உரிமைக்கு எதிரானது என்பதை இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறி, தமிழ்நாட்டு மீனவர்கள் படகுகள் ஏலம் விடப்படுவதை தடுக்க வேண்டும் என ஒன்றிய அரசையும், அயலுறவுத் துறை அமைச்சரையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

56. **வாழ்வு வதைபட இல்**
**வதைபட அல்லதன் வாழ்க்கை மிகைபட**
**கூறும் மீஇ மிசை.**

வாழ்க்கை என்பது, துன்பம் அடைவதற்காக அல்ல (வாழ்வதற்காகத்தான்) ஆனால் வாழ்க்கை துன்பம் நிறைந்தது. (அதனை ஏற்க வேண்டும் என்று கூறுவர்)

**சாகப் பிறந்தான்கொல் மாந்தர் சகதியில்**
**வாழப் பிறந்தான்பூ வாய்.**

சமுகம் சேறுபோல் சகதிகள் நிறைந்ததாக இருந்தாலும், சேற்றில் செந்தாமரை மலர்ந்து மணம் வீசுவதுபோல் சிறந்து வாழ்ந்து காட்ட வேண்டும்.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

சாதி வெறிக்கு ஆதரவாக குரல் கொடுத்ததை வரலாறு மன்னிக்காது என்பதை சுட்டிக் காட்டி, உ.பி.யில் மதவெறிக்கு முடிவு கட்டப்படும் என்று உ.பி.மக்களின் உணர்வுகளை சித்தரித்துள்ளார் நா.பெரியாசமி. வேலுநாச்சி, வ.உ.சி., பாரதி இங்கு இனியும் பிறப்பார்கள் என்ற ஜனசக்தி தலையங்கம் அருமை.

– **க.குகன்,** சைதாப்பேட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

தோதாத்ரியின் வரலாற்றுப் பொருள் முதல்வாதம், விஞ்ஞானப் பூர்வமாக வரலாறை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதை விளக்குகிறது. கொரோனாவும் குருதிக் கொடையும் என்ற எத்திராஜனின் ரத்தினச் சுருக்கமான செய்தி மிகவும் பயனுள்ள ஒன்று.

– **தெ.உஷா,** திருவள்ளூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்திய தொழிச்சங்க இயக்கத் தந்தை என்.எம். லோகாண்டே தற்காலச் சூழலில் மிகவும் அறியப்பட வேண்டியவர். அவரின் சாதனை மிகுந்த போராட்ட வரலாற்றை எம்.ராதாகிருஷ்ணன் சிறப்பாக விவரித்துள்ளார். பிறமாநிலச் செய்திகள் நின்று விட்டதா?

அவ்வப்போது கலை இலக்கியப் பூங்கா தலை காட்டுகிறது. ஜீவா நினைவு தினத்தை ஒட்டி ஜீவாவும் – இலக்கியமும் என்ற தலைப்பில் காசி விஸ்வநாதன் எழுதிய கட்டுரை ஜீவாவின் இலக்கிய ஆளுமையைக் காட்டுகிறது.

**உ.ரங்கன்,** மன்னார்குடி

**ஆசிரியர் ஜனசக்தி,**

மோடியை சாடியது பி.எம்.எஸ். என்ற டி.எம். மூர்த்தி குறிப்பிட்டுள் செய்தி நாடெங்கும் முழங்க வேண்டிய செய்திதான்.

**ஆ.சசிதரன்,** நெய்வேலி

**ஆசிரியர் ஜனசக்தி,**

நிறைவேறிவரும் நீண்டநெடுநாள் கனவு முத்தரசன் அவர்களின் கட்சிக் கடிதம் நெஞ் சில் நிழலாடுகிறது. கனவு கட்டிட முகப்பு சிறப்பு.

**கே.ஆர். ராஜதுரை,** பெரம்பூர்

தமிழ்நாடு அரசு வேளாண்மைதுறை சார்பில்

# ஒருங்கிணைந்த பண்ணையம் நிகழ்ச்சி

## அ.பாஸ்கர் துவக்கிவைத்தார்



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தமிழ்நாடு அரசு வேளாண்மைதுறை சார்பில், ஒருங்கிணைந்த பண்ணையம் நிகழ்ச்சி திருத்துறைப்பூண்டி வேளாண்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் தலைமை ஏற்று நடத்தினார். திருத்துறைப்பூண்டி வேளாண் உதவி இயக்குனர் ஆர்.சாமிநாதன், துணை வேளாண் அலுவலர் பி.ரவி மற்றும் உதவி வேளாண் அலுவலர் என்.ஜோதி கணேசன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய தலைவர் கே.பாலு ஆகியோர் கலந்துகொண்டு வேளாண்மையில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

## பவானி நகராட்சி ஆணையாளரிடம் ஏஐடியூசி சார்பில் கோரிக்கை மனு

ஒப்பந்த தொழிலாளர்களின் தினக்கூலியை ரூ.578 ஆக வழங்க வேண்டும்; அவுட் சோர்சிங் முறையை கைவிட்டு இரண்டு காலண்டர் வருடங்களில் 480 நாட்கள் பணி முடித்த ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, ஈரோடு மாவட்ட ஏஐடியூசி உள்ளாட்சித் துறை பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் பவானி நகராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன், சங்க தலைவர் வழக்கறிஞர் பாலமுருகன், மாவட்ட சுமைப்பணி தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர் ,கட்சியின் ஒன்றிய செயலாளர் கோபால், சங்க ஒன்றிய செயலாளர் கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வி.தொ.ச. சார்பில் முதியோர்களுக்கு வேட்டி சேலை


தென்காசியில் வி.தொ.ச. மாவட்ட துணைச் செயலாளர் கணேசன் தலைமையில், விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அதில் 100 ஏழை முதியோர்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இசக்கித்துரை பங்கேற்று சிறப்பித்தார். மேலும் வி.தொ.ச. மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முத்துச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டு செங்கல் உற்பத்திக்கு

## கண்மாய்களில் மண் அள்ள அனுமதிக்க கோரி ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில், விருதுநகர் மாவட்ட ஏஐடியுசி செங்கல் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் நாட்டு செங்கல் உற்பத்திக்கு கண்மாய்களில் மண் அள்ள அனுமதிக்க கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். சங்க தலைவர் குருசாமி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வட்ட செயலாளர் கோவிந்தன், துணை செயலாளர் மகாலிங்கம், தவிச சுருளியப்பன் ஆகியோர் பேசினர்.

## மூத்த தோழர் எம்.கே.முகுந்தன் மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட சென்னை முன்னாள் மாவட்ட குழு உறுப்பினரும், மூத்த தோழருமாகிய எம்.கே. முகுந்தன் இயற்கை எய்தினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் அவர்கள் எம்.கே. முகுந்தன் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார். மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் எம்.வசந்தகுமார் மற்றும் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏ.சுப்பிரமணி, எஸ்.பாஸ்கர், ஏ.அருள், ஏஐடியுசி மு.சம்பத், தோழர் உசேன், தொகுதி செயலாளர் அஜய் கோஸ், சி.ஜே.ஆனந்தன் மற்றும் திரளான தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## பொது வேலை நிறுத்த ஆயத்த மாநாடு

பிப்ரவரி 23, 24 நடைபெற வுள்ள அனைத்து தொழிற்சங்க நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தையொட்டி மயிலாடுதுறையில் வேலை நிறுத்த ஆயத்த கருத்தரங்கம் தொமுச பேரவை தலைவர் எஸ் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், ஐஎன்டியுசி மாவட்ட செயலாளர் ஆர் ராமச்சந்திரன், சிஐடியு மாநிலக்குழு உறுப்பினர் எம் கண்ணன், ஏஐசிசிடியூ மாவட்ட செயலாளர் எஸ் வீர செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், கே.ராஜ்மோகன் மற்றும் அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

நெல் கொள்முதலில் உள்ள குறைபாடுகளை களைய

# நிர்வாகத்தின் செயல்பாடுகளில் ஆக்கபூர்வ மாற்றம் வேண்டும்

## ஏஐடியூசி வேண்டுகோள்

ஏஐடியூசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமைதூக்கும் தொழிலாளர் சங்க மாநில பொதுச்செயலாளர் சி.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நெல்கொள்முதலில் உள்ள குறைபாடுகளை களைய சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வும், கொள்முதல் பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளம் நிர்ணயித்து வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை முன் வைத்து சங்க சார்பில் தொடர்ச்சியாக போராடினோம். எங்களது கோரிக்கை ஏற்கப்பட்டு தஞ்சையில் நடந்த அரசு நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் அவர்கள் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 3.50 ஆக இருந்த கூலி ரூபாய் 10 ஆக உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. கொள்முதல் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச சட்டப்படியான சம்பளம் அமுல்படுத்த அறிவிக்கப்பட்டது. சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அடிப்படை சம்பளம் நிர்ணயிக்கப் படவில்லை.

சில ஊர்களில் கிராமத்திற்கு மூட் டைக்கு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் அச்சுறுத்தி வசூலிப்பதும், தொடர்பில்லாத தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் கட்டாய வசூல் செய்வதும் குறைகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றன. இவை தடுத்து நிறுத்தப்படவேண்டும். எடை இழப்பு வசூலிப்பதை முழுமையாக கைவிடுவதோடு சரியான எடை வைத்துக் கொள்முதல் செய்வதையும் ,சேதாரம் இன்றி அனுப்புவதையும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு நிர்வாகத்தின் செயல்பாடுகளில் தலைகீழ் மாற்றம் கொண்டுவந்து, விவசாயிகள், கொள் முதல் பணியாளர்களுடன் இணைந்து நின்று நடைமுறை கஷ்டங்களைப் போக்கி குறைபாடுகள் இல் லாத கொள்முதல் செய்வதற்கான ஒத்துழைப்பு தரவேண்டும் என்று ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பாக கேட் டுக்கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள் ளார்.

## பட்டியலின மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



திருவண்ணாமலை மாவட்டத்தில் பட்டியலின மக்களின் மீது ஆதிக்க சாதியினர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான சாதிய வன்முறையை கண்டித்தும், சுதந்திர போராட்ட வீரர்கள் அடங்கிய ஊர்தியை திட்டமிட்டு புறக்கணித்த ஒன்றிய அரசினை கண்டித்தும், சென்னை சட்டக் கல்லூரி மாணவர் ரஹீம் மீது, கொடுங்கையூர் காவலர்கள் நடத்திய கொலைவெறி தாக்குதலுக்கு நீதி கேட்டும், இளைஞர் பெருமுன்றம், மாணவர் பெருமன்றம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் உறையூர் குறத்தெருவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ். சூர்யா தலைமை வகித்தார். இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் எம்.செல்வகுமார், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க. இப்ராஹிம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம். செல்வராஜ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து கண்டன உரை ஆற்றினார்.

சிபிஐ திருச்சி மாநகர் மாவட்ட செய லாளர் ஏ.கே.திராவிடமணி, ஏஐடி யூசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாணவர் பெரு மன்ற மாநில துணை செயலாளர் ஜி.ஆர். தினேஷ் குமார், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.சிவா, விவசாய சங்க மாவட்ட செயலாளர் எஸ்.சிவசூரியன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வே.நடராஜா, காமராஜ், க.ஆயிஷா, ஏர்போர்ட் ராஜா, டி.மார்க்சிம் கார்கி, ஆர்.பாலமுரளி, ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினர்.

## தஞ்சையில் 1982 துப்பாக்கிச் சூட்டில் பலியான தியாகிகள் நினைவு நாள்

1982ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் தேதி நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்திற்கு இடதுசாரி தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பினை ஏற்று அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள், மற்றும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொது வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கேற்றனர். வேலை நிறுத்தம் நாடு முழுவதும் வெற்றிகரமாக நடந்தது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த மன்னார்குடி ஞானசேகரன் மயிலாடுதுறை பகுதியை சேர்ந்த நாகூரான், அஞ்சான் ஆகிய மூவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் முன்னின்றனர். வேலை நிறுத்தத்தை முறியடிக்க முயன்ற காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. அந்த துப்பாக்கி சூட்டில் மூவரும் பலியானவர்கள். அவர்கள் தியாகத்தைப் போற்றும் வகையில் தஞ்சாவூர் கீழராஜவீதி ஏஐடியூசி அலுவலகம் முன்பு தியாகிகளின் 40வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார்.

1982ஆம் ஆண்டு நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் நேரடியாக பங்கு பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார் சிறப்புரையாற்றினர். வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் க.அன்பழகன், நுகர்பொருள் வாணிப கழக சங்க மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன், அரசு போக்குவரத்து சங்க மாநில துணைத் தலைவர் துரை. மதிவாணன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தைபொங்கல் கொடி ஏற்றும் நிகழ்ச்சி!




தைத்திருநாள் கொடியேற்றும் நிகழ்ச்சி தென்காசி மாவட்டம் முழுவதும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிவகிரியில் நகரச் செயலாளர் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் கலை நிகழ்ச்சி மற்றும் மேளதாளங்களுடன் ஊர்வலமாக சென்று 21 மையங்களில் வெகு சிறப்பாக கொடியேற்றப்பட்டது.

**இராயகிரி:** ராயகிரியில் துணைச் செயலாளர் சொரிமுத்து தலைமையில் ஊர்வலமாக சென்று 11 மையங்களில் கொடியேற்றப்பட்டது மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்ட குழு உறுப்பினர் இரா.சமுத்திரக்கனி ஆகியோர் பங்கேற்றனர்

**வாசுதேவநல்லூர் ஒன்றியம்:** புளியங்குடியில் வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர் ப.வேலு தலைமையில் 20க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்று நகரம் முழுவதும் உள்ள கொடிகளை ஏற்றி வைத்தனர். வாசுதேவநல்லூரில் கிளை செயலாளர் ராஜன் தலைமையில் கொடியேற்றப்பட்டது வாசு ஒன்றிய செயலாளர் பி.முருகன் தங்கப்பாண்டியன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். தென்மலையில் கிளைச் செயலாளர் முனியாண்டி தலைமையில் கொடியேற்றப்பட்டது ஒன்றிய செயலாளர் ப.வேலு, கிளை துணை செயலாளர் கருப்பசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தென்காசி தாலுகா:** ஆயிரப்பேரி கிளையில் லட்சுமணன் தலைமையில் கொடி ஏற்றப்பட்டது தாலுகா செயலாளர் கிட்டப்பா கோவிந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கடையம் ஒன்றியம்:** ஆழ்வார் குறிச்சியில் சூச்சுடையான் கொடியேற்றி வைத்தார் நிகழ்ச்சியில் மாநில குழு உறுப்பினர் வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவன், நகர செயலாளர் சுப்பிரமணியம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். ஆம்பூரில் 15 மையங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர் ஈஸ்வரன், சட்டநாதன், மாநில குழு உறுப்பினர் வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவம் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அழகப்பபுரம் கிளையில் பால்ராஜ் கொடியை ஏற்றி வைத்தார் மாநில குழு உறுப்பினர் வேலாயுதம் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.



## கதக் நடனக் கலைஞர்

# பிர்ஜ் மகராஜ் மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

புகழ்மிகு கதக் நடனக் கலைஞர் பிர்ஜ் மகராஜ் ஜனவரி 17 ஆம் நாள் இயற்கை எய்தினார். அவரது மறைவு குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:

புகழ்மிகு கதக் நடனக் கலைஞர் பிர்ஜ் மகராஜ் அவர்களின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியசெயற்குழு ஆழ்ந்தஇரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

83 வயதான பிர்ஜ் மகராஜ் இந்திய மக்கள் அனைவராலும் போற்றப்படுபவராகவும், நாடறிந்த நடனக் கலைஞராகவும் திகழ்ந்தார்; உயரிய விருதான பத்ம விபூஷண் விருது பெற்றவர் ஆவார்.

அவர்தம் மறைவு ஒரு மாபெரும் இழப்பு ஆகும். அவரின் மறைவு உண்டாகியுள்ள வெற்றிடத்தை நிரப்பு வது எளிதான செயலன்று என்று கட்சி கருதுகிறது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இந் தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## போக்குவரத்து அமைச்சர் உறுதி அளித்தவாறு

# ஊதிய ஒப்பந்தம் உடனடியாக பேசி முடிக்க வேண்டும்!

### போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!




தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரம் தொழிலாளர்கள், பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 1977ஆம் ஆண்டு முதல் மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்தம் பேசப்பட்டு வந்தது நடைமுறையில் இருந்தது.தற்போது 14 வது ஊதிய ஒப்பந்தம். 1.9 .2019அன்று பேசி முடித்து சம்பள உயர்வு ஏற்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் வருகின்ற செப்டம்பர் மாதம்15 ஆவது ஊதிய ஒப்பந்தம் நெருங்கிவிட்ட நிலையில் 14வது ஊதியத்திற்கு இன்னும்தீர்வு காணப்படவில்லை. எனவே உடனடியாக ஊதிய ஒப்பந்தத்தை பேசிமுடிக்க வேண்டும் என மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் கும்பகோணம் மண்டலம் தஞ்சாவூர் கோட்ட அலுவலகம் கரந்தை புறநகர் கிளை முன்பு நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை, தொழிலாளர்கள் சங்க பொதுச் செயலாளர் டி.கஸ்தூரி தலைமை வகித்தனர்.

கோரிக்கைகளை விளக்கி சம்மேளனத்தின் மாநில துணைத் தலைவர் துரை. மதிவாணன், கவுரவ தலைவர் கே.சுந்தரபாண்டியன், தலைவர் டி.தங்கராஜ் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

## மணப்பாறையில் இயங்கும் மாவட்ட மருத்துவமனையில்

# எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி ஏற்படுத்த வேண்டும்

### ஒன்றிய மாநாட்டில் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மணப்பாறை ஒன்றிய மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு ஆறுமுகம், ஸ்டாலின், கணேசன், பிரேமா ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டு கொடியை மூத்த தோழர் ராசு ஏற்றி வைத்தார்.

மறைந்த தோழர்களுக்கு ராஜேந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநாட்டை தொடங்கி வைத்து திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜ் உரை நிகழ்த்தினார். மாநாட்டை வாழ்த்தி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் சண்முகானந்தம், ஜனசக்தி உசேன், சுப்ரமணியன், தங்கமணி ஆகியோர் உரை நிகழ்தினர்.

ஒன்றியச் செயலாளராக தங்கராசு ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து மாநில நிர்வாககுழு உறுப்பினர் த.இந்திரஜித் உரை நிகழ்தினார்.

மணப்பாறையில் இயங்கும் மாவட்ட தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியும், மாவட்ட தலைமை மருத்துவமனைக்குரிய மருத்துவர்களை அதிகப்படுத்தவும், மணப்பாறை நகர் சுற்றி அமைய உள்ள புறவழிச்சாலைப்பணியை தொலை நோக்குப் பார்வையோடு பணியினை விரைவுபடுத்தவும்,

தமிழ்நாடு காகித ஆலையில் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிபடி நிலம் கொடுத்த அனைத்து விவசாயிகளுக்கும் மணப்பாறை தாலுகாவில் உள்ள இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வழங்கிடவும் தமிழக அரசை வலியுறுத்தி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்ட அறிவிப்பு

### பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்பட்டது

திருச்சிமாநகர் எடமலைப்பட்டி புதூர் ரயில்வே சுரங்கப் பாதையில் மழைநீர், கழிவுநீர் தொடர்ந்து தேங்கி கிடப்பதால் பொதுமக்களுக்கும், இருசக்கர வாகனத்தில் செல்வோருக்கும் மிகுந்த இடையூறு ஏற்படுவதோடு, தொடர்ந்து நிற்கும் நீரால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை சரிசெய்து சுரங்கப்பாதையில் நீர் தேங்காத வண்ணம் நிரந்தர தீர்வு காண கோரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோ அபிஷேகபுரம் பகுதி துணை செயலாளர் ஆர். முருகேசன் தலைமையில் போராட்டம் நடத்திட முடிவு செய்யப்பட்டிருந்தது.

திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை, திருச்சிராப்பள்ளி மாநக ராட்சி, எடமலைப்பட்டிபுதூர் காவல் நிலைய அதிகாரிகள் பங்கேற்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் க.சுரேஷ், அபிசேபுரம் பகுதி செயலாளர் பிரான்சிஸ், துணைச் செயலாளர் முருகேசன் உள்ளிட்டோர் ரயில்வே சுரங்கப் பாதையில் நீர் தேங்காதபடி நிரந்தர தீர்வு ஏற்படுத்தி தரப்படும் என்கிற உறுதிமொழியை ஏற்று போராட்டம் தற்காலிகமாக விளக்கிக் கொள்ளப்பட்டது.

## பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் சங்கம் சார்பில்

# பணி நிரந்தரம் வேண்டி சுகாதார இயக்குனருக்கு கோரிக்கை

பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளில் தீர்வு காண வலியுறுத்தி சுகாதாரப்பணிகள் இயக்குனருக்கு, பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் சங்கம் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது !

தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகா தார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள காலமுறை ஊதிய நிரந்தர பணியிடங்களில் தினக்கூலி அடிப்படையில் அரசு விதிகளின்படி பணி நியமனம் செய்யப்பட்டு கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டி கடந்த 29.11.2021 அன்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் முன்னிலையில் முதன்மைச் செயலாளர் அவரிடம் மனு அளிக்கப்பட்டது. அமைச்சரும், முதன்மை செயலாளரும் பல்நோக்கு மருத்துவ மனை பணியாளர்கள் கோரிக்கை நியாயமானது விரைவில் பணி நியமனம் ஆணை வெளியிடப் படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால் இதுநாள் வரை அவர்கள் அளித்த உறுதிமொழிப்படி எந்தவித நடவடிக்கையும் இல்லை. உடனடியாக பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் இயக்குனர் அவர்களுக்கு அந்தந்த மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் மூலம் கோரிக்கை விண்ணப்பம் அளிக்கும் இயக்கம் தஞ்சை மாவட்டத் தலைவர் பி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.



# மூத்த தோழர் சசீதரனிடம் தோழர் இரா.முத்தரசன் உடல்நலம் விசாரிப்பு

குமரி மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும், மாவட்டக்குழு உறுப்பினருமான சசீதரன் அவர்கள் உடல் நலக் குறைவு ஏற்பட்டு, நலிவுற்றிருந்த நிலையில் மஞ்சாலுமூடு அவரது இல்லத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குடும்பத்தாரிடன் நலம் விசாரித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு சார்பில் மருத்துவ நிதி ரூ. 5000 வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்டச் செயலாளர் எஸ்.இசக்கிமுத்து, துணைச் செயலாளர் துரைராஜ், நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, பொருளாளர் கே.நாகராஜன், வட்டார கவுன்சிலர் டென்னிசன் மற்றும் கிளை தோழர்கள் கலந்து கொண்டனர்.

# குடிநீர் கிணறு தோண்டும் பணி

### டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்

தளி சட்டமன்ற தொகுதி பெட்டமுகிலாளம் ஊராட்சி தொட்டமாளம், கம்பாளம் கிராமங்களில் குடிநீர் பிரச்சினை தீர்க்கும் வகையில் ழிஸிணிநிஷி நிதியில் ரூ.24 இலட்சம் மதிப்பில் கிணறு தோண்டும் பணியை தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற துணை தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மாமேதை லெனின் 98வது நினைவு நாள்

மாமேதை லெனினின் 98வது நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டது.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மேற்கு சட்டமன்ற தொகுதி உறையூர் நாச்சியார் கோவில் சந்திப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேற்குப்பகுதி துணைச் செயலாளர் சரண்சிங் தலைமையில், மாமேதை லெனின் திருவுருவப் படத்திற்கு ஏஐடியுசி திருச்சி மாவட்ட பொதுச்செயலாளர் க.சுரேஷ் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா மாவட்டக்குழு உறுப்பினர்கள் இப்ராஹிம், சத்யா, சூர்யா பாலமுரளி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**தருமபுரி:** தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் எதிரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏஐடியூசி ஆட்டோ சங்கத்தின் முன்னாள் மாநில துணைச் செயலாளர் அண்ணாதுரை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லம்பள்ளி வட்டாரக்குழு உறுப்பினர் சிவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.



# ஆன்லைன் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பாபநாசம் அருகே அம்மாபேட்டை அடுத்த அருந்தவபுரம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அரசு கொண்டு வந்துள்ள ஆன்லைன் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஆன்லைன் முறையை ரத்து செய்யக் கோரியும், பழைய நடைமுறையிலேயே நெல்லை கொள்முதல் செய்யக் கோரியும், சங்கு ஊதியும், நெல் மூட்டைக்கு மாலை கட்டியும், மணி அடித்தும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் எம். வெங்கடேசன் தலைமை வகித்தார். இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வடக்கு மாவட்ட செயலாளர் சாமு. தர்மராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றியச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.எஸ். பாலு, நகரச் செயலாளர் கே.ராஜாராமன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ஆலம்பட்டி ஊராட்சியில் சாலை அமைத்து தரக் கோரி ஆர்ப்பாட்டம்




சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அயோத்தியாபட்டினம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலடிப்பட்டி ஊராட்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு உள்ள மக்கள் தங்களுடைய அத்தியாவசிய தேவைகளுக்காக அருண் ஊத்துமலை குறிச்சி வேலூர் வழியாக சுமார் 65 கிலோமீட்டர் சுற்றி வருகின்றனர். இதனால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் கல்லூரி படிப்பை தொடர முடியாமல் இங்கு உள்ள குழந்தைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முறையாக சாலை அமைக்கும் பட்சத்தில் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும். இப்பகுதியில் சாலை அமைத்து தரக் கோரி 5 வருட காலமாக கோரிக்கை வைத்து வருகின்றனர். சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தார் சாலை அமைத்து தரக் கோரி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# எல்லாமே இலவசம்

இலவசம் என்பது அரசு மக்களுக்கு தருவதும், செல்வந்தர்கள் வறியவர்களுக்கு வழங்குவதும் அல்ல, மாறாக நாம் தனித்தும், கூட்டாகவும் சேர்ந்து பொருட்களை உண்டாக்கி நாமே அதை பயன்படுத்துகின்ற இலவசம் தான் சிறந்தது.

இத்தகைய இலவசத்தை தான் காந்தியடிகள் விரும்பினார். தன்னுடைய ஆசிரமங்களில் ஆசிரமவாசிகள் உழைத்து தாங்கள் துய்க்கும் பொருட்களை தேடிக் கொண்டார்கள். அதைப்போன்றே, ஒவ்வொரு கிராமமும் கூட்டாக சேர்ந்து சில அடிப்படையான நுகர் பொருட்களை தாங்களே உற்பத்தி செய்து தன்னிறைவு பெற வேண்டும்.தங்களிடம் உபரியாக இருந்தால் அந்த பொருட்களை மற்றவர்களுக்குக் குறைந்த விலையிலோ அல்லது பணம் பெற்றுக்கொள்ளாமலோ கொடுத்துவிடலாம். இப்படிப்பட்ட கிராமங்களின் கூட்டமைப்பால் ஒரு தேசத்தை தன்னிறைவு செய்ய முடியும். நமது தேசத்தில் காய்கறிகளைப் பயிர் செய்வதில் ஒரு புரட்சியை உருவாக்கிட வேண்டும். காய்கறி உணவு என்பது விருந்தாகவும்,மருந்தாகும் நமது சமூகத்தில் இருந்து வருகிறது.




வேலையின்மை, வறுமை, குடும்ப வருவாய் பற்றாக்குறை போன்ற காரணங்களால் ஊட்டச்சத்துள்ள காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள், பால், முட்டை, இறைச்சி உள்ளிட்ட உணவு பொருட்களை வாங்கி உண்ண முடியவில்லை. இதனால் நாட்டில் 50 சதவீதத்திற்கும் அதிகமான குழந்தைகளும், பெண்களும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு ஆளாகி பல்வேறு நோய்களில் சிக்கி தவிக்கின்றனர். எனவே கிராம மக்கள் தங்களுக்கு தேவையான காய்கறிகளை, கீரை, பழ வகைகளை உற்பத்தி செய்து அவற்றை பணம் கொடுத்து வாங்காமல் இலவசமாக பெற வழிவகுப்பதே இலவச காய்கறி கிராமமாகும்.

தமிழக அரசு கொண்டு வந்துள்ள நீங்களே செய்து பாருங்கள் என்கிற மாடித்தோட்ட திட்டமும், இலவச காய்கறி உற்பத்தியில் நோக்கிய ஒரு முன்னோடி திட்டம் ஆகும். ஊரில் உள்ள ஒவ்வொரு இளைஞர், மாணவர் இளம் பெண்கள், மகளிர் என அனைவரும் ஒரு சுய உதவி குழுவாக அமைத்துக் கொண்டு முருங்கை, தண்டுக்கீரை, பப்பாளி, சுண்டக்காய், அவரக்காய் போன்றவற்றை பயிரிட்டு அதை தங்களுக்குள் இலவசமாக பகிர்ந்து கொள்ளலாம். இதேபோன்று மற்ற பயிர்களையும் உருவாக்கி ஏன் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

ஊர் மக்கள் அனைவருக்கும், ஊரில் உள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் எல்லா வகையான அத்தியாவசிய காய்கறிகளும் இலவசமாக கிடைக்க வழிவகை செய்வதை தான் இலவச காய்கறி கிராமம் என அழைக்கிறோம். இப்படி நாம் முயல்கிற போது நமது கிராமங்கள் உணவுத் தேவையில் தன்னிறைவை எட்டிவிடும் என்பதை,

'எல்லாமே இலவசம்' என்கிற இந்த நூலில் பாரதி சின்னசாமி அவர்கள் தெளிவாக விளக்கி உள்ளார். இது ஒரு நல்ல சிந்தனை. இதை அனைவரும் பரீட்சித்துப் பார்க்கலாம்.இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்

**– இன்சுவை பாரதி**


**நூலாசிரியர் : பாரதி சின்னசாமி**
**வெளியீடு : பாவை பிரின்டர்ஸ் (பி ) லிமிடெட், 142 ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14, போன் : 04428482441**
**பக்கங்கள் : 170 விலை : ரூ.120**

## நூல் நயம்

# இந்தப் புத்தகம்

ஒவ்வொரு மனிதனும் வெற்றி பெறுவதற்கு முதலில் தன்னம்பிக்கை அவசியம். தன்னால் இதை செய்ய முடியுமா? முடியாதா? என்பதை ஆராயலாம் ஆனால் அது தன்னால் முடியாது என முயலாமல் இருந்துவிடக்கூடாது. அதனால் தான் நமது முன்னோர் முயற்சி திருவினையாக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தத் தன்னம்பிக்கையை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஊட்டுவதற்காக தான் சிகரம் சி.சதீஷ்குமார் 'இந்தப் புத்தகம்' எதையும் மாற்றும் எல்லாம் மாற்றும் என்ற தலைப்பில் உத்வேகமூட்டும் இந்த சிறு நூலை எழுதியுள்ளார்.

உலகம் விசித்திரமானது படிக்காதவர்களை பற்றித்தான் நாம் அதிகம் படித்துக் கொண்டிருக்கிறோம். அது காமராஜர் ஆனாலும், சச்சின் டெண்டுல்கர் ஆனாலும். நீங்கள் யார்?உங்கள் இலக்கு என்ன? உங் களது திறமைகள் என்ன?அதற்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் என் னென்ன என்பதை நீங்கள் அறிந்து கொண்டால் வெற்றி எளிதாகிவிடும். வெற்றி என்பது தொட்டு விடும் தூரத்தில் இல்லை என்பது எனக்கு தெரியும். அதை விட்டு விடும் எண்ணத்தில் நானும் இல்லை என்கிற வைராக்கியத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.




எத்தனை விமர்சனங்கள் வந்தாலும், அதை ஒரு எளிய புன்னகையில் நாம் கடந்து விட வேண்டும். அடிமையாக இருங்கள் என்பதல்ல, பொறுமையாக இருங்கள் என்பதுதான் இதில் முக்கியம். இலக்கை அடையும் வரை ஒரு துளி அளவு கூட தன் பாதையிலிருந்து விலகாமல் நாம் கொண்ட எண்ணத்தில் வைராக்கியத்தோடு பயணிக்க வேண்டும். ஏற்றப்படுகின்ற ஒவ்வொரு தீக்குச்சியும்,வெளிச்சத்திற்கான தேடல். அதுபோல கேட்கப்படுகின்ற ஒவ்வொரு கேள்வியும் அறிவுக்கான தேடல்.எனவே,கேட்பதற்கு நாம் அஞ்ச தேவையில்லை. கேள்விகளுக்கும் அஞ்சத்தேவையில்லை.

நாம் தவறு செய்கிறபோது கண்டிப்பவர்களை எதிரிகளாக பார்க்க தேவையில்லை.அவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும்,நம்மீது அக்கறை இல்லாதவர்களாக இருந்தாலும். தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும். மரங்கள் தழைத்து இம்மண்ணை பாதுகாப்பது போல, மழலைகள் நல்ல வண்ணம் வளர்ந்து விட்டால் இந்த பூமி புதிய பூமியாக மலரும் என்கிற நம்பிக்கையை இந்த புத்தகம் நமக்குள் விதைக்கிறது. இந்தப் புத்தகத்தை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

**- சமரன்**

**நூலாசிரியர் : சிகரம் சி.சதீஷ்குமார்**
**வெளியீடு : மேன்மை. சென்னை14**
**பக்கங்கள் : 40 விலை : ரூ.30**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்

# நபரை மாற்றுவதல்ல; கொள்கை மாற்றமே அவசியம்!



பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி புதிய செயற்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் ராபர்ட் கிரிப்த்ஸ் கூறும்போது, போரிஸ் ஜான்சன் பிரதமராக இருப்பதற்குத் தகுதி இல்லை என்பது உண்மை தான். ஆனால், லட்சக்கணக்கான மக்களுக்குத் தேவை அவரை அப்பொறுப்பிலிருந்து மாற்றிவிட்டு வேறொருவரை அதில் அமர்த்து வது என்பது அல்ல. ஏகபோக அதிகாரத்தைப் பாது காப்பதுதான் தற்போதைய ஆட்சி யாளர்களின் நோக்கமாக இருக்கிறது.

அவர்களுக்கு மானியத்தை அள்ளி வீசுகிறார்கள். எதிர்க்கருத்து மற்றும் போராட்டங்களை நசுக்கு வதற்காக புதிய ஜனநாயக விரோத சட்டங்கள் கொண்டு வரப்படு கின்றன. இவற்றிற்கு எல்லாம் சவால் விடக்கூடிய நிலைமை உருவாக வேண்டும் என்பதுதான் லட்சக்கணக்கான பிரிட்டன் மக்களின் தேவையாக இன்று இருக்கிறது என்றார்.

சமையல் எரிவாயு மற்றும் மின்சா ரத்திற்கான கட்டண உயர்வு மேலும் 20 லட்சம் குடும்பங்களை ''எரி பொருள் வறுமை''யில் தள்ளிவிடும். ஒட்டுமொத்தமாக, பிரிட்டன் முழுவ தும் 60 லட்சம் குடும்பங்கள் இந்த இரண்டு அத்தியாவசியத் தேவைகளையும் வாங்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இந்த அவலநிலை ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் பிரிட்டனின் ஐந்து பகாசுர எரிபொருள் நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். சென்ட்ரிகா பிரிட்டிஷ் எரிவாயு நிறுவனம், முதல் ஆறு மாதங்களி லேயே தனது வருமானத்தை இரட்டிப் பாக்கி விட்டது என்று கிரிப்த்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். விலைகளின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது. எரிபொருள் துறையை மீண்டும் அரசின் வசம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள கம்யூனிஸ்ட் கட்சி, அதுவரையில் பகாசுர நிறுவ னங்களின் கொள்ளை லாபம் மீது கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. வேலை, ஊதியம் மற்றும் பொதுச் சேவைகள் கோரி நாடு முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களில் முழுமையாகக் கலந்து கொள்ளப் போவதாகவும் கட்சி அறிவித்திருக்கிறது.



# சோஷலிச நிர்மாணமே பிரதான நோக்கம்

## கொரிய தொழிலாளர் கட்சி பிரகடனம்!

கொரிய தொழிலாளர் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த டிசம்பர் மாதம் 27 முதல் 31 வரை நடைபெற்றது. அக்கட்சியின் பொதுச் செயலாளரான கிம் ஜாங் உன் கூட்டத்திற்கு தலைமையேற்றார். சோஷலிச நிர்மாணமே பிரதான நோக்கம் என்று கொரிய தொழிலாளர் கட்சி பிரகடனம் செய்தது.

இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளும் அந்நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் செலுத்திடவும், நிலையான, மேம்பட்ட வாழ்வை மக்களுக்கு வழங்கிடவும் அரசாங்கம் முழு கவனம் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய கிம் ஜாங் உன், சோஷலிச நிர்மாணத்தின் வளர்ச்சிக் கட்டம், கொரிய தொழிலாளர் கட்சி மற்றும் அரசு ஆகியவற்றின் எதார்த்த நிலைமைகள் மற்றும் சூழலின் அடிப்படையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார். சோஷலிச நிர்மாணத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்த கட்சிக்கும், மக்களுக்கும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார். இந்த ஆண்டை மாபெரும் புரட்சிகர நிகழ்வின் ஆண்டாக அந்நாட்டு வரலாற்றில் பதிவு செய்ய அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று கூறிய அவர், ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறும் மாபெரும் போராட்டம் இது என்று விளக்கினார். வேளாண் துறையில் அரசு முதலீட்டை அதிகரிக்க வேண்டியதன் தேவையை அவர் வலியுறுத்தினார்.

அமைச்சரவையும், அரசின் இதர பொருளாதார அமைப்புகளும் வேளாண் துறையில் அவற்றின் முதலீட்டின் பங்கை உரிய முறையில் அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்திய மத்தியக் குழு, திட்டமிட்டபடி, எவ்வித நிபந்தனைகளும் இன்றி கருவிகள், வேளாண் பொருட்கள் மற்றும் நிதி ஆகியவற்றை வழங்குவதற்கான கட்டுக்கோப்புமிக்க முறைமைகளை அமைத்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. நீர்ப்பாசனம், எந்திரமயமாக்கம், ஊரகப் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை அடைவதில் அரசு முதலீட்டின் பங்கு பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

ஷாம்ஜியோன் நகர நிர்மாணத்தின் வழியாகப் பெற்றத் திரண்ட அனுபவங்களின் சாதகமான அம்சங்களை விரிவுபடுத்துவத்தின் மூலமாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கை நிலைகளை மாற்றிட பொதுச் செயலாளர் கிம் ஜாங் உன் அறைகூவல் விடுத்துள்ளார். ஊரகப் பகுதிகளில் குடியிருப்பு கட்டுமானப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது பற்றியும், முன்னுரிமை அடிப்படையில் ஊரகப் பகுதி கட்டுமானங்களுக்கு தேவையான சிமெண்ட் வழங்கும் பணி பற்றி பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் சமர்ப்பித்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஊரகப் பகுதி கட்டுமானப் பணிகளுக்கான புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான வழிமுறைகளை உருவாக்குவதற்கான ஆலோசனை மற்றும் பகுப்பாய்வு நடைபெற்றது.

## நிதித்துறை மீது டிஜிட்டல் மயமாக்கத்தின் தாக்கம்

### - ஜெனிவாவில் சிறப்பு கூட்டம்

சர்வதேச நிதித்துறையின் மீது அதிவேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் மயமாக்கத்தின் தாக்கம் குறித்து விவாதிக்க ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் ஜனவரி 24 முதல் 28 வரை ஒரு தொழில்நுட்ப கூட்டம் நடைபெற்றது என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வலைத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

வருங்காலத்தில் நிதித்துறையில் பணிகள் நடைபெறும் பாங்கின் மீது டிஜிட்டல் மயமாக்கத்தின் தாக்கம் மற்றும் அதனால் உருவாகவுள்ள புதிய வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்து விவாதிப்பதுதான் இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். நிதித்துறையில் உருவாகி வரும் சர்வதேச வளர்ச்சிப் போக்குகள், கோட்பாடுகள், உத்திகள் தொடர்பாக சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.



சி.மகேந்திரன்

# வீரவணக்கம்



## “கம்யூனிஸ்ட் என்பது என் அடையாளம்”



**மரணத்தை, இவ்வாறு எதிர் கொண்டவர்கள் ஒரு சிலரே! தனது மரணம் எப்பொழுது நிகழப் போகிறது என்பதை மிக நன்றாகவே அவர் அறிந்திருந்தார். மரண செய்தி யார் யாருக்கெல்லாம் சொல்ல வேண்டும் என்ற பட்டியலை தோழர் மு.ப. அவர்களிடம் தெரிவித்து விட்டார்.**

ஒரு நிபந்தனையையும் விதிக்கிறார். தன் உடல் நிலைப் பற்றிய எந்த தகவலையும் மரணத்திற்கு முன் நெருங்கியவர்கள் யாருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று. தன்னால் பிறருக்கு ஏற்படும் சிரமங்களை, தவிர்க்க வேண்டுமென்றே விரும்புகிறார்.

மரண சாசனம் போன்ற ஒன்றையும் அவர் தெரிவிக்கிறார். அதை கேள்விபட்ட போது என் உடல் சிலிர்க்கத் தொடங்கி விட்டது. “தான் மரணமுற்ற பின் தனது உயிரற்ற உடலில் சிவப்பு சட்டை அணிவித்து, செங்கொடி உடலில் போர்த்தப்பட வேண்டும் என்கிறார். இவ்வாறு தனது கடைசி மணித் துளிகளை யோசித்து, தனக்கான மனித அடையாளத்தை முழுமை படுத்திக் கொண்ட மாமனிதர் தான், எஸ். துரைராஜ்.

கடைசியாக என் தோழன் துரைராஜ் அவர்களின் முகத்தை பார்க்க திருச்சி செல்கிறேன். தோழர் மு.ப என்று நம்மால் அன்போடு அழைக்கப்படும் மு.பழனியப்பன் அவர்கள் இன்றைய கம்யூனிஸ்டு இயக்கத்தின் மூத்த தோழர். ஜனசக்தி இதழுக்காக வெகுகாலம் தன்னை அர்ப்பணித்து கொண்டவர். தோழர் துரைராஜ் அவர்களின் அக்கா கணவர். கடைசி பத்து நாட்கள் அவருடனேயே இருந்திருக்கிறார். அவர் மேற்கண்ட இந்த தகவல்களை கூறியது, என்னை உணர்ச்சி கொள்ள வைத்தது.

மகள் கண்ணமாவை, அவரது துணைவியார் சுலோச்சனா அவர்களையும் பல ஆண்டுகளுக்கு பின்னர் பார்க்கிறேன். இருவரும் என்னை அடையாளம் கண்டு கொண்டார்கள். கண்ணம்மாவின் கண்களில் கண்ணீர் பொங்கி நிற்கிறது. “அங்கிள் காம்ரேட் துரைராஜ் தம்மிடம் விடைபெற்றுக் கொண்டார்“ என்றார். காம்ரேட் என்பது தந்தைக்கும் மகளுக்குமான அன்புச் சொல். அவர் கூறிய மற்றொரு தகவல் என்னை திகைக்க வைத்துவிட்டது, மரணத்தின் மூலம் விடை பெறுதலை துரைராஜ் எவ்வாறு நிகழ்த்திக் கொண்டார் என்பதை இதன் மூலம் புரிந்து கொண்டேன். “ஒரு கையில் என்னையும், மறுகையில் அம்மாவையும் பிடித்துக் கொண்ட நிலையிலேயே அப்பாவின் உயிர் பிரிந்தது” என்று பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு கூறினார் கண்ணமா. தனது மரணத்தை அர்த்தத்துடன் நிகழ்த்திக் கொண்டவர் துரைராஜ் அவர்கள்.

நான் அவரை முதன் முதலில் அனைத்திந்திந்திய மாணவர் பெருமன்ற மாநாடு ஒன்றில் திருச்சி தேவர் மன்றத்தில் சந்தித்தேன். ரஷியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ‘ஜெனித்’ கேமரா ஒன்று அவரிடம் இருந்தது. ஒரு பத்திரிக்கையாளராக அவர் அங்கு வந்திருந்தார். அன்றுதான் புன்சிரிப்புடன் ஒரு நீண்ட தோழமை உறவை, என்னுள் தொடக்கி வைத்தார். இதன் பின்னர் 48 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

தோழமை என்றால் என்ன என்பதை அவரிடமிருந்து தான் கற்றுக் கொள்ள வேண்டும். 1979 ஆம் ஆண்டில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் மாநிலப் பொறுப்பேற்று சென்னை பாலன் இல்லம் வந்து சேர்ந்தேன். சென்னையை பற்றி எதையும் அறிந்திராத கிராமப்புற இளைஞன். இதைப் புரிந்து, அந்த காலத்தில் இவர் எனக்களித்த உதவி ஒவ்வொன்றையும் இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன். தோழமை கொண்ட மூத்த சகோதரனாகவே எனக்கு அவர் தெரிகிறார்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் ஆகிய இரண்டிலும் மிகவும் கூடுதலான ஈடுபாட்டை செலுத்தியவர். குடும்பப் பின்னணி ஒரு காரணம். இவரது தந்தை, திருச்சி பொன்மலையில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட ரயில்வே தொழிலாளி. பெரிய குடும்பம். அனைவரும் கட்சியின் மீது பிடிப்பு கொண்டவர்கள். இவரது அரசியல் பயிற்சி அனைத்தும் மதுரை தியாகராயக் கல்லூரியில் தான் தொடங்கியது. இளங்கலையில் விலங்கியலையும் பட்ட மேற்படிப்பில் தமிழ் இலக்கியத்தையும் பாடமாக எடுத்திருந்தார். அவர் பயின்ற காலத்தில் செயலூக்கமுள்ள மாணவர் பெரு மன்றம் ஒன்று அந்த கல்லூரியில் செயல்பட்டு வந்தது. கொரானாவில் நம்மை விட்டு பிரிந்த சென்ற எழுத்தாளர் சந்திரகாந்தன் தியாகராயக் கல்லூரியில் மாணவர் அமைப்பில் அவருடன் இணைந்து செயல்பட்டவர்.

துரைராஜ் சென்னை பாலன் இல்லத்திற்கு வந்தால் அங்கு தனிக் குதூகலத்தைப் பார்க்க முடியும். நகைச்சுவையும், கிண்டலும் கூத்திடும். அங்கு இன்றைய கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, விவசாய தொழிலாளர் அரங்கத்தில் முழுநேர ஊழியராகப் பணியாற்றிய நடராஜன், சிறிது காலத்திற்கு பின்னர் மாணவர் பெருமன்றத்தில் தலைவராக பணியாற்றிய திருச்சி எம்.செல்வராஜ் ஆகியோர் அங்கு இருந்தோம். உலக புகழ் பெற்ற நடனக் கலைஞர்கள் உதய்சங்கர், அமலா சங்கர் ஆகிய இருவரும், தூரதேசங்களிலிருந்து கொண்டு வந்து வளர்த்திருந்த மாமரத்தின் நிழலிலும், டீக்கடையிலும் கூட்டாக நாங்கள் நிகழ்த்திய உரையாடல்கள் எத்தனை அரசியல் வளர்ச்சியை எனக்கு தந்திருக்கிறது.

**நீண்ட பயணத்தில் “கம்யூனிஸ்டாக வாழ்ந்து காட்டுவதில் தான் பெருமை இருக்கிறது” என்று அடிக்கடி துரைராஜ் கூறுவார். அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட ஆளுமைகள் ஒவ்வொன்றாக பட்டியலிட்டுப் பார்க்கிறேன். என் கண்ணீரால் தான் அவருக்கு நன்றி சொல்ல முடிகிறது.**

புன்னகை மாறாத நட்புணர்வை கொண்டவர் துரைராஜ். மிகவும் மாறுபாடான கொள்கை கொண்டவர்களையும் வெறுக்கத் தெரியாதவர். அரசியல் தலைவர்கள், பத்திரிக்கை நண்பர்கள், பழகியவர்கள் என்று அனைவரையும் ஈர்த்து தனக்குள் வைத்துக் கொள்ளும மேன்மை துரைராஜிடம் இருந்தது.

இந்திய பொதுவுடமை இயக்கத்தின் மூத்த தோழர் இரா. நல்லகண்ணு அவர்களும், விவாசாயிகளின் பேரியக்கத் தலைவர் ஆதிமூலம் அவர்களும் இவர் மீது கொண்டிருந்த அன்பை இப்பொழுது யோசித்துப் பார்க்கிறேன். மனதுக்குள் ஒரு விதமான நிறைவு ஏற்படுகிறது.

இவர் குடும்ப வாழ்வில் சிறந்து வாழ்ந்தவர். ஒருமுறை மகள் கண்ணமாவையும், சகோதரி சுலோச்சனா அவர்களைப் பற்றியும் நலம் விசாரித்தேன். அவர்கள் நலனைக் கூறிய துரைராஜ், மருமகன் செந்தில்குமார் மருமகன் அல்ல. மகன் என்றார். இரண்டு பேரக்குழந்தைகளுடன்தான் பொழுது கழிகிறது என்பதையும் மனநிறைவோடு சொன்னார்.

ஆரம்ப காலங்களில் எழுத்தாளர் ஜெயகாந்தன் நூல்களைப் பற்றியும் கதைகள் பற்றியும் கூடுதலாக எனக்கு அறிமுகப்படுத்தியவர் துரைராஜ் தான். ஜெயகாந்தன் மீது எல்லையில்லா அன்பை கொண்டிருந்தார். இதைப்போல கவிஞர் பரிணாமன் அவர்களை ஊக்குவிப்பதிலும் அவரது கவிதையை வரி விடாமல் திருப்ப சொல்வதிலும் தனி ஆர்வம் கொண்டிருந்தார். என்னிடம் இருந்த இலக்கிய ஆர்வம் புதிய நுட்பங்களைப் பெறுவதற்கு இவரும் ஒரு முக்கிய காரணம் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

நான் மாணவர், இளைஞர் பெருமன்றங்களில் பொறுப்பிலிருந்து பணியாற்றிய காலங்களில் ‘தமிழகத்தை பாலைவனமாக்காதே’, ‘தன்னானே பாடல்கள்’, ‘வேலையின்மை எதிர்ப்பு போராட்டம்’ என்ற மூன்று முக்கிய இயங்கங்கள் நடந்தன. இவை மூன்றிற்கு இவர் அளித்த பங்களிப்பை இப் பொழுது நினைத்துப் பார்க்கிறேன். அமைப்பை வளர்ப்பதில் அவரவர் பங்கை அவரவர் செலுத்த வேண்டும் என்பது குறித்த இவரது ஆழ்ந்த புரிதலையும், இவரது பொறுப்புணர்ச்சியையும் இது எனக்கு உணர்த்துகிறது.

கட்சியின் தலைவர்கள் எம்.கல்யாணசுந்தரம் ப.மாணிக்கம், கே.டி.கே தங்கமணி போன்றவர்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். அவர்களோடு தனக்கு மாறுபட்ட கருத்துக்கள் உண்டு என்றாலும், அதை நேரில் சொல்லிவிடும் இயல்பையும் கொண்டிருந்தார். தோழர் மொகித்சென் மார்க்சீயத்தை நன்கு கற்றறிந்த கல்வியாளர். அவருடன் துரைராஜ் தத்துவார்த்த உறவு கொண்டிருந்தார். அவர் எழுதிய **Road and traveller** என்னும் நூலை தமிழாக்கம் செய்ய போவதாக கூறினார். தனது வாழ்வின் இறுதி நாட்களில் ஐந்து அத்தியாயத்தை அவர் தமிழாக்கம் செய்துவிட்டதாக அறிகிறேன்.

அச்சடித்தைப் போல தமிழிலும் ஆங்கிலத்திலும் அழகுற எழுத்துக்களை எழுதும் துரைராஜ் அவர்கள் ஒரு சிறந்த பத்திரிக்கையாளர். இதனால் தான் தமிழக அரசின் சார்ப்பில் தமிழக முதல்வர் சிறப்பு இரங்கல் செய்தியை வெளியிட்டிருந்தார். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரப் பூர்வமான ஆங்கில இதழ் ‘நியூஏஜ்’ பத்திரிக்கை இவரது பிறப்பிடம். இதன் பின்னர் இந்து, பிரண்ட் லைன், பேட்ரியாட், லிங்க், நியூஸ் டுடே முதலான ஆங்கில பத்திரிக்கைகளிலும் பி.டி.ஐ. முதலான செய்தி நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார்.

கொரானா முடக்கம் கெடுபிடி நிறைந்த காலம். தோழர் துரைராஜ் அவர்களின் இறப்பும் நிகழ்கிறது. திருச்சி மாவட்டத் தோழர்கள் இறுதி விடைகொடுத்து அனுப்ப, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். டெல்லியிலிருந்து தோழர் ராஜா, குடும்பத்தினரிடம் இரங்கல் செய்தியை தெரிவித்துக் கொண்டிருக்கிறார். எம். செல்வராஜ் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் முன்நின்று கவனித்து வருகிறார். திருச்சி மாவட்ட செயலாளர் இந்திரஜித், வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் ஆகியோர் அவசரம் அவசரமாக வந்து சேருகிறார்கள். என் தோழனே உனது இறுதி பயணம் தொடங்க இருக்கிறது.

வெளியுலகில், நீ ஒரு மேன்மை கொண்ட பத்திரிக்கையாளன். இன்னமும் பல பெருமைகள் உன்னைப் பற்றி பேசப்படுகிறது. ஆனாலும் கம்யூனிஸ்டு என்பது என் அடையாளம் என்பதாக, நீ கடைசியில் அணிந்திருந்த சிவப்பு சட்டையும், செங்கொடியும் சொல்கிறது, நீ நிகரற்ற கம்யூனிஸ்டு புரட்சிகாரன் என்று.

உனக்கு என் வீரவணக்கம்.

வாழ்க மாசற்ற உன் புகழ்.















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 29.01.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும்

## கே.சுப்பராயன் எம்.பி. வேண்டுகோள்



**திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் ஒன்றிய வர்த்தகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ்கோயலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:**

நூல் விலை ஏற்றம் தொடர்பாக கடந்த நவம்பர் 17, 2021 தேதியிட்ட எனது கடிதத்திற்கு ஜனவரி 4, 2022 தேதியிட்ட உங்கள் கடிதத்தில் உள்ள பதிலைக் கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். பில்லியன் டாலர் தொழில்துறையையும், மில்லியன் கணக்கான தொழிலாளர்களையும் முடக்கும் அச்சுறுத்தலைக் கொடுக்கும் இத்தகைய பாரதூரமான பிரச்சினைக்கு முற்றிலும் உணர்ச்சியற்ற மற்றும் மிகவும் அலட்சியமான பதிலைத் தெரிவித்துள்ளீர்கள்.

இருப்பினும், நம்பிக்கைக்கு மேல் நம்பிக்கை வைத்து பிரச்சனையின் தீவிரத்தன்மையை உணர்ந்து கொண்டு ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்களைக் காப்பாற்ற உடனடியாகச் செயல்படக்கூடிய தீர்வுகளைக் கொண்டு வர உங்கள் உறுதியான முழுமையான ஈடுபாட்டை காண்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் ஆடை ஏற்றுமதியில் 70% பங்கு வகிக்கும் திருப்பூர் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு வருடந்தோறும் 27,000 கோடி ரூபாய்க்கு மேல் நாட்டின் மொத்த ஆடை ஏற்றுமதியில் 70% பங்கினைபெற்று அந்நிய செலவாணி ஈட்டிவரும் திருப்பூரின் உள்ளாடைத் தொழில் நூல் விலையின் கடுமையான உயர்வால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு இயங்கும் 90% நிறுவனங்கள் சிறு மற்றும் குறு நிறுவனங்களாகும். அவர்களில் ஏறக்குறைய 80% நூல் விலை உயர்வைச் சமாளிக்க முடியாமல் இழுத்து மூடிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்தத்தொழிலை சார்ந்துள்ள துணை மற்றும் உப தொழில்கள் அனைத்தும் முடங்கியுள்ளன. இதன் விளைவாக 50 லட்சம் பேருக்கு வேலை இழப்பு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

வருவாய் இழப்பு மற்றும் வேலை இழப்பு ஆகியவற்றின் ஒட்டுமொத்தவிளைவுமிகபெரியதாக்கத்தைசமூக, பொருளாதார வெளியில் ஏற்படுத்துவது கண்கூடாகத்தெரிகிறது.

ஒரு வருடத்தில் நூல் விலை கிட்டத்தட்ட 200% உயர்ந்துள்ளது. குறிப்பாக சீனா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் நம்மை விட குறைவான விலைக்கு அமரிக்க, ஐரோப்பிய இறக்குமதியாளர்களிடம் விற்பனை செய்ய தயாராக இருக்கும்போது கடும் நூல் விலை ஏற்றத்தால் இந்திய ஆடை ஏற்றுமதி வர்த்தகம் செய்ய இயலாமல் போய்க்கொண்டிருக்கிற நிலை தெளிவாகத்தெரிகிறது.

இந்திய ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்துறை முன் எப்போதும் இல்லாத வகையில் அரசின் உடனடியான ஆதரவான நேர்மறையான செயல்பாடுகளுக்காக எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது.

பருத்தி மற்றும் பருத்தி நூல் ஏற்றுமதியை அவசரகால ஏற்பாடாக உடனடியாக தடை செய்ய உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**ஒரு சிலர் மட்டும் வர்த்தகத்தையும் தொழிலையும் தங்கள் கையில் எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஒட்டுமொத்த தொழில்முனைவோரின் நலன்களைப்பாதுகாக்க முயற்சி எடுப்பதோடு நூலை, பஞ்சை பதுக்கி வைத்து விற்பனை செய்யும் நபர்களை நிறுவனங்களை இனங்கண்டு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்**

பஞ்சு விலை அதிகமாகிவிட்டது என்ற காரணத்தை சொல்லி மேலும் அதிகமாக பருத்தி நூலை விற்றுக்கொண்டிருக்கும் நூற்பாலைகளை விலையை குறைக்கச்சொல்லுங்கள்.

ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டத்தை நடத்தி, அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, அதன்படி தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபட உடனடி நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

கூடுதலாக, இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத் துறை தற்போது உலக அளவில் வளர்ந்து வரும் சவால்களை எதிர் கொள்வதற்கு உங்களை உங்கள் அமைச்சகத்தை அந்த முயற்சியில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் கொள்கை ரீதியான தலையீடுகள் மூலம் இந்த பிரச்சனையை சீர் செய்வதற்கு தேவையான ஆதரவை அரசாங்கம் தர முன்வரும்போது தான் சர்வதேச சந்தையில் நிலைத்திருக்கவும், வளரவும், தொழிலை மேம்படுத்தவும் முடியும்.

ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலின் வருவாயை தக்கவைத்துக் கொள்வதற்கும், லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைவாய்ப்பைக் காப்பாற்றுவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் மிக அவசியமான நீண்ட கால கொள்கைத் திட்டம் தேவை என்பதால், தங்களுடைய உடனடிப் பார்வைக்கும் நேர்மறையான சிந்தனையோடு அணுகவும் கீழ்கண்ட யோசனைகளை பரிந்துரைக்க விரும்புகிறேன்.

- நாட்டின் ஆண்டு பருத்தி உற்பத்தி சுமார் 360 லட்சம் பேல்கள் ஆகும். ஜவுளி மற்றும் ஆடைத் துறைக்கான ஆண்டுத் தேவையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக உள்ளது. ஆனால் பருத்தி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையானது தேசிய தேவை மற்றும் உள்நாட்டு விநியோகத்தை போதுமான அளவில் நிவர்த்தி செய்யவில்லை. இந்திய பயன்பாட்டாளர்களுக்கு தேவையான பருத்தியை பருத்தி விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்முதல் செய்து தொழிற்சாலைகளுக்கு நியாயமான விலையில் வழங்க வேண்டும்.
- பருத்தி ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பட்டு, தேசிய உற்பத்தியை தேசிய நுகர்வுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
- அதிக மகசூலைப் பெறுவதற்கு பருத்தியின் நார்த் தரத்தை மேம்படுத்தவும், சரியான தரப்படுத்தல் முயற்சியோடு விதைகளின் தரத்தை மேம்படுத்தவும் சரியான முன்முயற்சி எடுப்பதில் வேளாண் அமைச்சகம் ஈடுபட வேண்டும்.
- பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க பருத்தி விவசாயிகளுக்கு போதிய உதவிகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கப்பட வேண்டும்.
- என்.டி.சி.ஆலைகள் மூலம் தேவையான நூலை உற்பத்தி செய்யுங்கள்.
- தேசிய நுகர்வுக்கான நூலை என்டிசி ஆலைகள் உற்பத்தி செய்து நியாயமான விலையில் வழங்க வேண்டும்.
- பருத்தி சாகுபடி மேம்படுவதிலிருந்து ஆடைதயாரிப்பு வரையிலான செயல்பாடுகளின் முழுச் சங்கிலியையும் உள்ளடக்கியஒரு விரிவான கொள்கை விவாதிக்கப்பட்டு திட்டமிடப்பட்டு வகுக்கப்பட வேண்டும்.

இந்த முயற்சியில் விவசாயம், தொழில் மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய அனைத்தும் பயன்பெறும் . வருவாயை, தொழில் வளர்ச்சியை அதிகரிப்பதோடு அந்நியச் செலாவணி பெருமளவில் அதிகரிக்க வழிவகுக்கும் இந்த வகையில் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகவும் வாய்ப்புக்கள் உள்ளன .

இது போன்ற கொள்கை ரீதியான தலையீடு மட்டுமே “ஆத்ம நிர்பாரின் சாரத்தை வெளிப்படுத்தும் வறுமையின் விளிம்பில் வாடும் கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கும், நலிவடையும் நிலையில் தவிக்கும் ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மிகுந்த மனசங்கடத்தோடு அவசரமான வேண்டுகோளை விடுக்கிறேன். இவ்வாறு கே.சுப்பராயன் எம்.பி. அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

# உலகின் முதல் பத்து கோடீஸ்வரர்களின் சொத்து இரண்டு மடங்கு அதிகரிப்பு!

## 99% மக்கள் வருமானம் குறைந்தது!

கொரோனா வைரசினால் உலகமே துன்பத்தை சந்தித்தாலும் பெரும் கோடீஸ்வரர்களுக்கு அது லாபம் தான். ஆக்ஸ்ஃபாம் வெளியிட்ட ஆய்வு முடிவு அதைத்தான் காட்டுகிறது.

ஸ்காட்லாந்தில் உள்ள டாவோஸ்நகரில் உலகப் பொருளாதார மாநாட்டில் சமத்துவமற்ற சமூகம் குறித்த அறிக்கையை ஆக்ஸ்ஃபாம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ”கொரோனா வைரசினால் உலகில் உள்ள முதல் 10 கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதே நேரம் , 99 சதவீத மக்களின் வருமானம் குறைந்துவிட்டது.

790 கோடி மக்களின் சொத்துகளைவிட 6 மடங்கு அதிகமான சொத்து வெறும் 10 கோடீஸ்வரர்களிடம் உள்ளது:

வைரஸ் தொடங்கும்போது 70,000 கோடி டாலராக இருந்த 10 கோடீஸ்வரர்களின் சொத்து தற்போது 1.50 லட்சம் கோடி டாலராக அதிகரித்துள்ளது. ஒரு வினாடிக்கு 15 ஆயிரம் டாலர் வீதமும், நாள் ஒன்றுக்கு 1300 கோடி டாலர் வீதமும் அதிகரித்துள்ளது. இந்த 10 கோடீஸ்வரர்களும் தங்களின் 99.99% சொத்துகளை நாளையே இழந்தால்கூட, மீதமிருக்கும் அவர்களின் சொத்து, உலகில் உள்ள 99% மக்களின் சொத்து மதிப்பை விட அதிகமாக இருக்கும். உலகில் உள்ள 310 கோடி ஏழை மக்களின் சொத்துகளைவிட 6 மடங்கு இந்த 10 கோடீஸ்வரர்களிடம் உள்ளது.

முதல் பத்து கோடீஸ்வர முதலாளிகள்:

கடந்த 14 ஆண்டுகளில் இந்த 10 கோடீஸ்வர்களின் சொத்து அதிகரித்ததைவிட, கொரோனா காலத்தில்தான் மிக வேகமாக அதிகரித்தது. அதாவது 5 லட்சம் டாலர் அளவுக்கு சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது. 2021, நவம்பர் 3ம் தேதி, ஃபோர்ப்ஸ் கணக்கின்படி, உலக கோடீஸ்வரர்களில் முதல் 10 இடங்களில் எலான் மக்ஸ், ஜெப் பிஜோஸ், பெர்நார்ட் அர்னால்ட் கு டும்பத்தார், பில் கேட்ஸ், லாரி எலிஸன், லாரி பேஜ், செர்ஜி பிரின், மார்க் ஜூகர்பெர்க், ஸ்டீவ் பால்மெர், வாரன் பஃபெட் ஆகியோர் உள்ளனர்.

வருமானம் இழந்த பெண்கள்:

2020ம் ஆண்டில் மட்டும் பெண்கள் ஒட்டுமொத்தமாக 80,000 கோடி டாலர் வருமானத்தை இழந்திருக்கிறார்கள். ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, கரீபியன் ஆகிய நாடுகளில் உள்ள 100 கோடி பெண்களின் சொத்துகளைவிட 252 ஆண்களிடம் அதிகமாக இருக்கிறது. இனப் பாகுபாட்டையும் இந்த கொரோனா வைரஸ் அதிகரித் துள்ளது. இரண்டாவது அலையில், இங்கிலாந்தில், வங்கதேசத்தைச் பூர்வீமாகக் கொண்டவர்கள்தான் பூர்வீக வெள்ளையர்களைவிட 5 மடங்கு அதிகமாக உயிரிழந்திருப்பார்கள்.

பிரேசிலில் உள்ள கறுப்பினத்தவர்கள்தான், வெள்ளை இன மக்களைவிட 1.5 மடங்கு அதிகமாக உயிரிழந்துள்ளனர்”. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.